விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 08 திங்கட்கிழமை (23.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

## தரம் 6 - 13 வரையான பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)
கொரோனாத் தடுப்புக்கான செயலணியின் பரிந்துரைகளுக்கு அமைவாக நீண்டகால திட்டமிடல்களுடன் பாடசாலைகள் இன்று 19


## எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் வடக்கு, கிழக்கை புயல் தாக்கும்

### வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)
வங்கக்கடலில் உருவான தாழமுக்கம் எதிர்வரும் 24 முதல் 48 மணித்தியாலங்களில் புயலாக மாறும் சாத்தியம் உள்ளதாகவும் இதனால் வடக்கு, கிழக்கில் சூறாவளியின் தாக்கம் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 14

### பசிலை அமைச்சராக்கத் திட்டம்?

# மேலும் இரண்டு புதிய அமைச்சுக்கள்





## விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)
அமைச்சரவையில் மேலும் இரண்டு அமைச்சுக்களை உருவாக்குவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார். நவம்பர் 20 திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சை உருவாக்குவதற்கான வர்த்தமானியே நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

### எறிகணைக் குண்டுகள் பலாலியில் மீட்பு!



(யாழ்ப்பாணம்)
பலாலி - அன்ரனிபுர பகுதியில் பொலிஸ்விசேட அதிரடிப் படையின 19

### மோ.சைக்கிளுக்கு தீ மூட்டி எரிப்பு



19

### விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

(அராலி)
சித்தன்கேணிச் சந்தியில் கடந்த 11ஆம் திகதியன்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த 19

### கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடலை தகனம் செய்யுங்கள்

#### நிபுணர்கள் குழு அறிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் 19

### மாங்குளத்தில் விபத்து; இராணுவச் சிப்பாய் பலி

(கருமபுரம்)
முல்லைத்தீவு, மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் மணவாளன் பட்டமுறிப்புப் பகுதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் பகுதியில் நிலை கொண் 19

### ஆரம்ப பிரிவில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கத் தேவையில்லை

#### வடக்கு கல்வியமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வட மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டிய தில்லை என மாகாண 19

### 20 ஆயிரத்தையும் கடந்தது பாதிப்பு நேற்றும் 391 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
நாட்டில் நேற்று மட்டும் 391 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனாக் கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 643 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டோ 19

### விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்த மூன்று 19

### கொரோனாவால் நேற்றும் 4 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் நேற்றும் 4 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி இலங்கையில் கொரோனாத் 19

### மாலதி படையணியின் முன்னாள் போராளி லண்டனில் உயிரிழப்பு



(கரணவாய்)
லண்டன் ஊசியம் பகுதியில் வாழ்ந்துவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாலதி படையணியின் முன்னாள் 19

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
லகிஷா கமல்ராஜ்
187

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 187 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது பேர்த்தி செல்வி லகிஷா கமல்ராஜ் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவரை கற்பித்த தரம் 5 வகுப்பாசிரியர் திருமதி துஷயா ரகுமார் மற்றும் தரம் ஒன்றில் இருந்து கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது பேர்த்தி பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

(4719)

திருநெல்வேலி

வாழ்த்துவோர்:
அப்பப்பா செல்வராசா
அப்பம்மா லோகா


# மார்ச் மாதத்துக்கு பின்பே விமான நிலையத்தை திறக்கலாம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குப் பின்னரே இலங்கையில் விமான நிலையத்தை திறக்க முடியுமாக இருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

தற்போது அத்தியாவசிய விமான சேவைகள் நடைபெறுகின்ற போதும், அதனைத் தவிர்ந்து வேறெந்த விமான சேவைகளும் முன்னெடுக்கப்படுவதில்லை.

இந்த ஆண்டு இறுதியில் விமான நிலையங்களைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும், தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டு விமான நிலையத்தைத் திறக்கும் நடவடிக்கையைப் பிற்போடுவதற்கு ஆராய்ந்து வருவதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் காமினி லொக்குகேவிடம் கேட்டபோது, நாட்டின் விமான நிலையத்தைத் திறக்க இன்னமும் எந்தத் தீர்மானம் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காணப்படும் நிலையில் இந்த ஆண்டு இறுதிவரை விமான நிலையங்களைத் திறக்க முடியாது என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டில் பொதுப் போக்குவரத்தை சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளுடன் முன்னெடுத்துச் செல்கின்ற போதும், விமான சேவைகளை அவ்வாறு முன்னெடுப்பது முடியாத நிலைமையே காணப்படுகின்றது என்றும், எப்படியும் மார்ச் மாதத்துக்குப் பின்னரே அதனைத் திறக்க முடியுமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஞா)


## மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான

### வரவு - செலவுத் திட்டம்

### மக்கள் பார்வைக்கு வைத்தல்

1985 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக 23.11.2020 தொடக்கம் 07.12.2020 வரை பிரதேச சபையிலும் பிரதேச சபை பொது நூலகத்திலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

திரு. ம. தயானந்தன்
கௌரவ தவிசாளர்,
மாந்தை கிழக்கு பிரதேச சபை,
பாண்டியன்குளம்.

(C-759)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி கலாராணி ரஜீபன் அவர்களின்
அன்புக் கணவர்

அமரர்
### செல்வநாயகம் ரஜீபன்

அவர்கள் நேற்று (22.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகிய செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-757)

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## இருபத்தைந்து ஆண்டுகள் நீங்கா நினைவுகளில்...





தோற்றம்
03.11.1941

மறைவு
23.11.1995

தோற்றம்
18.08.1983

அமரர்
### கனகசபை சண்முகசுந்தரம்
( சோமு )
ஸ்தாபகர் சிவன்மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

அமரர்
### சண்முகசுந்தரம் சிவரூபன்
( டியூகோ )
மாணவன் - யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி

இருவரையும் இழந்து இடருடன் இணைந்து
இருபதும் ஐந்துமாய் உருண்டன ஆண்டுகள்
நெருங்கும் உங்கள் நினைவுகள் மனத்தில்
இருக்கும் நிலைக்கும் என்றும் எம்முடன்

" துர்க்கா இல்லம் "
இல. 29, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(C-756)

# இலங்கை உள்ளிட்ட நாடுகளில் காணாமல் ஆக்கப்படுதலை முடிவுக்குக் கொண்டு வருக

(வோஷிங்டன்)

**இலங்கை உட்பட உலகெங்கும் பலவந்தமாக ஆட்கள் காணாமல் ஆக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர அழைப்பு விடுத்து அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் பிராட் ஷெர்மன் மற்றும் ஜேமி ரஸ்கின் ஆகியோர் சபையில் தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளனர்.**

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பில் நீதி கோரியும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியும் 1,300 நாட்களுக்கு மேலாகப் போராடிவரும் காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம் குறித்தும் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டுமென வலியுறுத்தி அரச படைகள் மற்றும் ஏனைய தரப்புக்களின் அச்சுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் மீறி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உறுதியுடன் போராடுவதாகவும் தீர்மானத்தை முன்வைத்த ஜேமி ரஸ்கின் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பலவந்தமாக ஆட்களை காணாமல் போகச் செய்தமை உள்ளிட்ட போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் பொறுப்புக் கூறத் தவறிவிட்டனர். இவர்களைப் பொறுப்புக் கூறச் செய்ய வேண்டிய இலங்கை அரசு அதற்கு மாறாக அவர்களை இராணுவ உயர் பதவிகளில் தரமுயர்த்தியுள்ளது எனவும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டுப் பிரகடனத்தை அங்கீகரிக்குமாறு இந்தத் தீர்மானத்தில் அமெரிக்காவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உலகெங்கும் காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக எங்கள் கூட்டாளிகளுடன் இணைந்து நாங்கள் போராட வேண்டும்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும் என குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு அல்லது அதற்குப் பொறுப்பானவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, ஆசிய பிராந்தியத்தில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பிராட் ஷெர்மன் மற்றும் ஜேமி ரஸ்கின் ஆகியோர் முன்வைத்துள்ள இந்தத் தீர்மானத்தில் ஆட்களை பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல் என்ற சட்ட விரோத நடைமுறையை கைவிடுமாறு அனைத்து நாடுகளிடமும் கோரப்பட்டுள்ளது.

சீனா, இலங்கை, இந்தோனேசியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. (ஜ-4)

## பாடசாலைகள் மீள ஆரம்பிப்பது தொடர்பில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரின் விசேட அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அறிவித்தலுக்கமைய சகல பாடசாலைகளிலும் தரம் 6 முதல் தரம் 13 வரையிலான வகுப்புக்கள் உரிய சுகாதார நடைமுறைகளுக்கமைய இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகுவதால் வகுப்பறைகளில் மாணவருக்கிடையில் 1.5 மீற்றர்கள் சமூக இடைவெளியை பேணி வகுப்புக்களை நடத்துமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அதிபர்களை அறிவுறுத்தியுள்ளார்.

ஆயினும் அதிக மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளில் தரம் 10,11, 12,13 வகுப்புகள் தவிர்ந்த ஏனைய வகுப்புக்கள் மாணவர் நெருக்கடியை குறைக்கும் வகையில் சுழற்சி முறையில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான தகவல்கள் குறித்த பாடசாலைகளின் நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெற்றோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டும் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, சென்.ஜோண்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் விசேட சுழற்சி முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளாகும். (நி-4)

## இயன்றவரை பொதுப் போக்குவரத்தை மாணவர்கள் தவிர்க்கவும்

### கல்வி அமைச்சின் செயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கவுள்ள நிலையில் மாணவர்கள் சுகாதார நடை முறைகளைக் கட்டாயம் கடைப் பிடிப்பதுடன் கூடுமானவரை பொதுப் போக்குவரத்தை தவிர்க்கலாம் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் நிலையில் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய மாணவர்கள் செயற்படுவதனை அதிபர்கள் உறுதிப் படுத்த வேண்டும்.

இதற்கு மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம் பழைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தகங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப்படிவத்தினை யாழ். வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் (மு.ப.8.30- பி.ப. 4.15) பெற்று பூரணப்படுத்தி 07.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செல்வரட்ணம் சந்திரராஜா
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.

(சி-755)


## சேவை நலன் பாராட்டும் 60 ஆவது அகவை பூர்த்தியும்

### திரு.பார்த்தசாரதி விஜயகுமார்

(2020.11.22 இல் 60 வயது பூர்த்தி)

(நூலகர் தரம் - II, பொது நூலகம், சங்கானை
வடமாகாண உள்ளூராட்சி நூலகர்,
பணியாளர் ஒன்றியத்தின் தலைவர்)

சேவைக்காலம்:- 33 வருடங்கள்
இவர் சேவையாற்றிய இடங்கள்:-
வலி.மேற்கு, பிரதேச சபை
வலி.தெற்கு, பிரதேச சபை
வலி.வடக்கு, பிரதேச சபை




நூல் சார்ந்த புனித பணியை
நுணுக்கமாய் ஆற்றியவர்
இனிய பண்பும் இடைவிடா முயற்சியும்
இவருக்கு அமைந்த இனிய குணங்கள்

(சி-754)

நூலக நண்பர்கள்
சகீலகன், பவதாரணி, அஜந்தா,
கி.அனிதா, சி.அனுசியா, சு.ஜெயலஷ்மி.

# பாடசாலைக் கொத்தணியை உருவாக்கி விடாதீர்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

3ம் தவணைக்காக கற்றல் செயற்பாடுகளுக்காக இன்று பாடசாலைகள் ஆரம்பிக்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் தற்போதைய சூழலில் பாடசாலைகளை மீளவும் ஆரம்பித்து பாடசாலைக் கொத்தணியை உருவாக்கிவிடாதீர்கள் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து விடுக்கப்பட்ட அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

இன்று தரம் 6 முதல் உயர்தரம் வரை பாடசாலைகள் ஆரம்பமாகும் என அறிவித்துள்ளீர்கள். இன்றுவரை மரணங்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. தொற்றாளர் எண்ணிக்கை உயர்ந்தே செல்கின்றது. ஆடைத் தொழிற்சாலை கொத்தணியும் பேலியகொட கொத்தணியும் நாடு முழுவதும் பரவியுள்ளது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கும் போதே ஆடைத்தொழிற்சாலை நோயாளர்கள் கண்டறியப்பட்டனர். அதன் காரணமாகவே பரீட்சையை இரு வாரங்களுக்காவது ஒத்திவைத்து தொற்றைக் கட்டுப்படுத்திய பின்னர் பரீட்சையை நடத்துங்கள் என கேட்டோம். பரீட்சை தொடர்ந்தது. தொற்றோடு மாணவர்களும் பரீட்சை எழுதினர். அதனை இயல்பு நிலையென கருதிய மக்கள் சாதாரணமாக நடந்து கொண்டனர். அதன் விளைவே இன்றைய மோசமான நிலைக்கும் காரணம்.

நாட்டில் உருவாகியுள்ள இரண்டு கொத்தணிகளுக்கு மேலதிகமாக பாடசாலை கொத்தணி என ஒன்று உருவாவதற்கு வழியேற்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு சில அறிவுறுத்தல்கள் இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது.

ஆரம்ப பிரிவுகள் (1-5) இணைந்துள்ள இடைநிலை, மேல்நிலைப் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் பாடசாலை செல்ல வேண்டுமா?

வெவ்வேறு மாவட்டங்களில் கடமையாற்றும், வேறு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும். தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகள் இயங்கும் பிரதேசங்களுக்கு எவ்வாறு செல்வது அவர்களின் கடமை ஒழுங்கு என்ன? போன்ற விடயங்களில் தெளிவான அறிவித்தல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் போக்குவரத்து பொலிஸாரால் கண்காணிக்கப்படும்

(கொழும்பு)

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தல் பகுதிகளைத் தவிர நாட்டின் அனைத்து பாடசாலைகளும் இன்று முதல் 06 - 13 ஆம் வகுப்புகளுக்காக மீண்டும் திறக்கப்படுகிறது.



இந்நிலையில் பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்கள் முறையான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

போக்குவரத்து பொலிஸார் இவ்வாறான சேவையில் ஈடுபடும் வாகனங்களின் நடமாட்டத்தை அவதானிப்பார்கள் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்தார். (நி-4)

# மாந்தை கிழக்கு பிரதேச சபை 2021 ஆண்டுக்கான குத்தகை மீள் கேள்வி அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பொன்னகர், பாண்டியன்குளம், பாலிநகர், நட்டாங்கண்டல் சந்தைகள் இவ்வருடம் 01.01.2021 முதல் 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 23.11.2020 - 08.12.2020 வரை (அலுவலக நாட்களில் மு.ப. 09 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை)

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 08.12.2020 பி.ப. 3.30 மணி வரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 08.12.2020 பி.ப. 3.45

கேள்வி திறக்கப்படும் இடம்:- மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்

கேள்விப் பத்திரங்களை மாந்தை கிழக்கு பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளமுடியும். பெறப்படும் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியினை தவிசாளர் மாந்தை கிழக்கு பிரதேச சபை பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் என முகவரியிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க முடியும். இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகைக்கான சந்தைகள் | சந்தை வகை | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பாண்டியன்குளம் | மரக்கறிச் சந்தை | 13,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 02 | பாண்டியன்குளம் | மீன் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 03 | பாண்டியன்குளம் | கோழி இறைச்சிக் கடை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 04 | நட்டாங்கண்டல் | மரக்கறிச் சந்தை | 13,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 05 | நட்டாங்கண்டல் | மீன் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 06 | நட்டாங்கண்டல் | கோழி இறைச்சிக் கடை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 07 | பொன்னகர் | மரக்கறிச் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 08 | பொன்னகர் | மீன் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 09 | பொன்னகர் | கோழி இறைச்சிக் கடை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 10 | பாலிநகர் | மரக்கறிச் சந்தை | 18,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 11 | பாலிநகர் | மீன் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 12 | பாலிநகர் | கோழி இறைச்சிக் கடை | 13,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 13 | பாலிநகர் | வாராந்தச் சந்தை | 09,000.00 | 1,500.00 | 1,000.00 |

**நியந்தனைகள்**

- பாலிநகர் வாராந்தச் சந்தையில் சகல விதமான அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.
- இலங்கைப் பிரஜையாகவும், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்வி கோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
- எந்தவொரு கோள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
- ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
- சித்தியடையும் கேள்விதாரர்கள் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வராகாலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**தவிசாளர், பிரதேச சபை,**
**மாந்தை கிழக்கு.**

(C-759)

# சட்டங்கள் சிறுபான்மையினருக்கு மட்டுமா?- இம்ரான் கேள்வி

(கொழும்பு)


ஒரே நாடு ஒரே சட்டம் நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமா? என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இன்று அரசாங்கம் ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கூறினாலும் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆதரவாளர்களுக்கு ஒரு சட்டமும் ஏனையவர்களுக்கு இன்னொரு சட்டமுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கொரோனா அச்சத்தால் நாட்டின் பல பகுதிகளில் வணக்கஸ்தலங்கள் மூடப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் தமது ஜும்மா தொழுகையைக் கூட நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். தமிழ் சகோதரர்கள் தமது தீபாவளி பண்டிகைக்கு கூட கோவிலுக்கு செல்ல முடியாமல் இருந்தனர்.

ஆனால் பிரதமரின் பிறந்த நாளை முன்னிட்டு மூடப்பட்டுள்ள வணக்கஸ்தலங்களை



திறந்து அவருக்கு ஆசி வேண்டி வழிபாடுகள் இடம் பெற்றன.

குறிப்பாக பள்ளிவாசல்களில் உருவப்படம் எதனையும் முஸ்லிம்கள் காட்சிப்படுத்துவதில்லை. ஆனால் பிரதமரின் பெரிய உருவப்படம் பள்ளிவாசல்களில் காட்சிப் படுத்தப்பட்டு துஆ பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளமை கண்டிக்கத்தக்கது.

அதுபோன்று மாவீரர் நினைவு தினத்துக்கு நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ளன.

சிறுபான்மையினருக்கு எதிராக பயன்படுத்தப்படும் சட்டங்கள் பெரும்பான்மையினரை கட்டுப்படுத்துவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# அமைச்சரவையில் மாற்றங்கள்?

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படலாம் என நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனவரியில் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது பசில் ராஜபக்ஷவும் அமைச்சரவையில் உள்வாங்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் பசில் ராஜபக்ஷவை சம்மதிக்க வைப்பதற்கான முயற்சியில் ஜனாதிபதியும் பிரதமரும் ஈடுபட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை மாற்றத்தின் பின் தற்போது இராஜாங்க அமைச்சராகவுள்ள சரத் வீரசேகர சட்டஒழுங்கு விவகாரங்களிற்கான அமைச்சராக பதவி உயர்த்தப்படவுள்ளதாகவும், பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்பு திணைக்களம் போன்றவை சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும் எனவும், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப விவகாரங்களை ஜனாதிபதி தன் வசம் வைத்திருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கொரோனாவுடன் தப்பிச்சென்ற பெண்ணுக்கு உதவி புரிந்தவர்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

அங்கொட தொற்றுநோய் வைத்தியசாலையிலிருந்து தனது இரண்டரை வயதுடைய மகனுடன் தப்பிச்சென்ற பெண்ணை, பொலிஸார் கைது செய்துள்ளனர் .

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட நிலையில் கொழும்பு- அங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் வைரஸ் காரணமாக சிகிச்சை பெற்று வந்த தனது இரண்டரை வயதுடைய மகனுடன் கடந்த வியாழக்கிழமை இரவு தப்பிச் சென்றிருந்தார்.

அந்த பெண்ணின் மகன் தந்தையின் பாதுகாப்பில் இருந்த போது பொலிஸார் அவரை அடையாளம் கண்டிருந்தனர்.

தற்போது அந்த பிள்ளை தனது தந்தையின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றது.

இதன்போது தலைமறைவாகியிருந்த பெண்ணை கண்டறிவதற்காக பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து முன்னெடுத்துவந்த தொடர் சோதனை நடவடிக்கைகளுக்கமைய, இரு நாட்களுக்கு பின்னர் அந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த பெண்ணுடன் தொடர்பு கொண்ட வேறுயாராவது இருப்பார்களா? என்றும் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்தகைய நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பேருந்தும் பாதையும் மாறினாலும் சாரதிகள் மாறவில்லை நீண்ட காலமாக நாட்டின் பொருளாதாரம் நாசமாக்கப்பட்டுள்ளது

## வரவு-செலவுத் திட்டம் குறித்து அநுரகுமார எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இந்த அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டினை மீட்டெடுக்கும் எந்தவொரு திட்டத்தையும் வகுக்கவில்லை, சர்வதேச கடன்களை மேலும் அதிகரிக்கும் கொள்கையையே அரசாங்கம் உருவாக்கியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை, 2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மீதான இரண்டாம் நாள் இறுதி விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னைய ஆட்சியாளர்கள் இப்போதுள்ள ஆட்சியையும் இந்த ஆட்சியாளர்கள் முன்னைய ஆட்சியையும் விமர்சித்து வருகின்றனர்.

ஆனால் உண்மையில் இவர்கள் அனைவராலும் நீண்ட காலமாக நாட்டின் பொருளாதாரம் நாசமாக்கப்பட்டுள்ளது. இரண்டு சாரதிகள் மாறி மாறி ஒரே பாதையில் பயணிக்கும் பேருந்தை ஓட்டுகின்றனர். சாரதிகள் அவ்வப்போது மாறினாலும் பேருந்தோ, பாதையோ மாறவே இல்லை. எமது நாட்டின் சகல துறைகளும் இன்று வீழ்ச்சி கண்டுள்ளது.


எமது தேசிய உற்பத்திகள் முழுமையாக அழிக்கப்பட்டு அனைத்துமே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடத்தில் தேசிய வருமானம் 24 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால் எமது நாட்டின் செலவுகள் அளவுக்கு அதிகமாகியுள்ளன.

அரச வருமானம் கடன்களைச் செலுத்த போதுமானதாக இல்லை. கடன்களை மாத்திரமே செலுத்தினால் ஏனைய துறைகளை எவ்வாறு மீட்டெடுப்பது. எமது நாட்டின் மொத்த கடன்களில் 44 வீதம் சர்வதேச கடன்களாகும்.

இவற்றை விரைவாக செலுத்தியாக வேண்டும். எனவே நாடு பாரிய கடன் நெருக்கடியில் வீழ்ந்துள்ளது. அரச நிறுவனங்களின் கடன் 1.3 ட்ரில்லியன் ரூபாவாகும். அரச திறைசேரி 500 பில்லியன் வங்கி மிகப்பற்றில் செல்லுகின்றது. நாட்டின் பிரதான கடனாளி அரசாங்கமாகும்.

நான் ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். டைட்டானிக் கப்பல் பனிப்பாறையில் மோதி மூழ்கியது. இவ்வாறு மோதிய பின்னர் டைட்டானிக் கப்பல் முழுமையாக மூழ்க இரண்டு மணித்தியாலங்கள் நாற்பது நிமிடங்களும் எடுத்தன. இந்த இரண்டு மணி நாற்பது நிமிடங்களும் கப்பலில் இருந்த "பாண்ட் வாத்தியம்" இசைக்கப்பட்டுக்கொண்டிருந்ததாம். அதேபோன்று தான் இந்த அரசாங்கமும் டைட்டானிக் கப்பலில் இசைக்கப்பட்ட "பாண்ட் வாத்தியம்" போன்றது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# அச்சத்தால் அலரிமாளிகை முடக்கம்



(கொழும்பு)

கொரோனா அச்ச நிலைமையைக் கருத்திற்கொண்டு, அலரிமாளிகையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

ஊடகமொன்று நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொரோனா அச்ச நிலைமையைக் கருத்திற் கொண்டு, மறு அறிவித்தல் வரை கடமைக்கு சமுகமளிக்க வேண்டாம் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சில விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)


30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்



சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப் பதிகாரியுமாகிய ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பிறப்பு:06.10.1927

இறப்பு:23.11.1990

275, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
சமூக அபிவிருத்தி மன்றம்.



31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அமரர் பத்மாசினி (பத்தி) பாலசிங்கம்



பத்மாசினி [பத்தி] பாலசிங்கம் அன்னார் காலம் சென்ற சின்னையா பாலசிங்கம் [பாலா] ஓய்வு பெற்ற தோட்ட அதிகாரி [பீன் கந்த குறூப் நிவிட்டிகல] யின் பாசமிகு மனைவியார்

மலர்வு 17 . 05 . 1932

உதிர்வு 24 . 10 . 2020

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையர் என்றும் உரியர் பிறர்க்கு"
என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க

"மம்மி" யாய், அப்பம்மாவாய், அன்ரியாய்
குஞ்சியம்மாவாய், அப்பாச்சியாய், நண்பர்கள்
வட்டத்தில் பத்தியாய் வாழ்வாங்கு வாழ்ந்து
விண்ணகத்தே சென்றதென்ன?

வேதனையால் வெம்பியழவும்
சோகத்தால் சோர்ந்து விழவும்
எம்மை விட்டு செல்லத் துணிந்ததென்ன?
மண்ணில் பிறந்தவர்கள் மண்ணில் அடக்கம்
இது உலக நியதி

இப்பூவுலகில் வாழ்ந்த நீவீர்
என்றும் எமதுள்ளத்தில்
அணையா நம்பிக்கை தீபமாய் திகழ்வீர்கள்



இறுதிச்சடங்கிலிருந்து இன்றுவரை பலவழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

(C-748)

36, கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

துயரில் வாழும்:- மருமகள், பேரமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

# மலக்கழிவு உரமாக்கல் பொறிமுறை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பிரதான பிரச்சினையாகக் காணப்படும் மலக்கழிவு சுத்திகரிப்பு பொறிமுறையை சிறிய அளவில் மேற்கொள்ள 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்திற்கான வாக்கெடுப்பு நிகழ்விற்கு முன்னர் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகராட்சி மன்றத்தின் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பிரதான பிரச்சினையாகக் காணப் படும் மலக்கழிவு உரமாக்கும் பொறிமுறையை சிறிய அளவில் மேற்கொள்ளக் கூடிய வகையில் இயந்திரத் தொகுதி ஒன்றினை நிறுவுவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு மேற் கொள்ளப்பட் டுள்ளது.

அத்துடன் எதிர்பாராத விதமாக இரண்டாம் தர நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எமது நகராட்சி மன்றத்தில் முன்னெடுக்கப்படவிருந்த 500 மில்லியன் நிதி ஒதுக்கீட்டிலான வேலைத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள் ளது.

எனவே குறித்த திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள நகரில் கடைத் தொகுதி அமைத்தல் வேலைத் திட்டத்தினை உள்ளூர் அபிவிருத்தி நிதிய கடன் மற்றும் பிற நன்கொடைகள் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

2021ஆம் ஆண்டிற்கான இவ் வரவு-செலவுத் திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 129.15 மில்லியனாகும்.

இதில் 61.14 மில்லியன் சொந்த வருமானமாகவும் மிகுதி நன்கொடையாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் வீதி அபிவிருத்தி, திண்மக் கழிவு முகாமைத்துவம், விளையாட்டு மைதான அபிவிருத்தி, வீதி விளக்குகள் பொருத்தல், காணிகள் எல்லைப் படுத்தல் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இப்பணிகளை முன்னெடுப்பதற்கு சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள், வரியிறுப்பாளர்கள், சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தொடர்ந்தும் தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென அவர் தனது வரவு-செலவுத்திட்ட உரை யில் தெரிவித்திருந்தார். (5-4-30)

# மாணவர்கள் கௌரவிப்பு




(பொற்பதி)

சிகரம் கல்வி நிறுவனத்தினர் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாசாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கு. ரம்யா-(171), க.சர்மிதா-162 ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர். இதில் சிகரம் கல்வி நிறுவனப் பணிப்பாளர் கே. உதயகுமார் கலந்து கொண்டார். (5-4-64)

# புகையிரத நிலையம் இனந்தெரியாதோரினால் உடைப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி-தச்சன்தோப்பு பகுதியில் உள்ள புகையிரத நிலையக் கண்ணாடி மற்றும் பாதுகாப்பு கூரை ஆகியன இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது புகையிரத சேவை இடம் பெறுவதில்லை. இதனைப் பயன்படுத்தி சிறுவர்கள் புகையிரத நிலையக் கதவினை உடைத்து உள் நுழைந்து பின்னர் பாதுகாப்பு கூரையைப் பிரித்து அதனுள் இருந்த புறாக்களை பிடிப்பதற்காக இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# தமிழர்களின் உணவைக் கொச்சைப்படுத்திய அதிகாரியின் கருத்திற்கு அங்கஜன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உணவு பழக்கவழக்கத்தை இழிவுபடுத்தும் முகமாக யாழ்.நீதவான் நீதிமன்றில் கருத்துத் தெரிவித்த யாழ்.தலைமைப்பொலிஸ்பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாண பொலிஸாரால் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர்ச்சூழலில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கான நினைவேந்தலை தடைசெய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தமிழ் மக்களின் உண்ணும் உணவுகளை கொச்சைப்படுத்தும் முகமாக "சோறும், பிட்டும், வடையும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண மக்களுக்கு பீட்சா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம்" என நீதிமன்றில் கருத்து கூறியிருந்தார்.

30 வருட கால கொடிய யுத்தத்தினால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவு பஞ்சத் தால் உயிர் நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவரது கருத்தானது அனைத்து நாட்டில் வாழும் மூவின மக்களையும் ஒரே சட்டத்தால் பரிபாலிக்கும் பொலிஸ்துறையில் உயர் பதவியில் இருப்போர் இன ஐக்கியத்தை குழப்புவதும் மற்றும் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் கருத்துக் கூறுவதையும் தவிர்த்து கொள்ள வேண்டும்.

மற்றும் கடந்த காலங்களில் தமிழ் மக்களை தேர்தலின் போது உசுப்பேத்தி அரசியல் லாபம் தேடுகின்ற அரசியல் வாதிகளுக்கு இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் காலங்களில் மக்களை ஏமாற்றுவதற்கு பக்கபலமாக அமைந்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)

# பா.உ.பெயரை வீதிக்குச் சூட்ட கோரிக்கை

(சாவகச்சேரி)

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் நாமத்தை கற்குளி முதலாம் ஒழுங்கை பழைய பொலிஸ் நிலைய வீதிக்கு சூட்டுமாறு குடியிருப்பாளர்கள் வட்டார நகரசபை உறுப்பினர் நடனதேவன் ஊடாக சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் சேவை மற்றும் பிரதேசப் பற்று ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் குடியிருப்பாளர்கள் குறித்த வீதிக்கு "ந.ரவிராஜ் வீதி" எனப் பெயரை சூட்டுமாறு கோரியுள்ளனர். (5-4-30)



தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் 198 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்ற தெல்லிபழை மகா ஜனக் கல்லூரி மாணவி சு.யனுஷ்காவை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய எம். ஏ.சுமந்திரன் அவரது வீட்டிற்குச் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

(படம்-மகாலிங்கம்)



நல்லூர் அரிமா கழகத்தினால் ஒரு தொகை கஜு மரக்கன்றுகள் அண்மையில் யாழ்.சிறாம்பியடி மக்களுக்கு வழங்கப்பட்டன. (படம்-சுஜீவன்)

# விபத்தில் இளைஞர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கெற்பேலி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்ற போது வேகக்கட்டுப்பாட்டினை இழந்ததால் இவ் விபத்து சம்பவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கெற்பேலி மத்தி மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 20 வயது சிந்துஜன் என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் (5-4-30)

# அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியின் கருத்திற்கு இலங்கை ஆட்சேபனை





(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அதிகார கையளிப்புக்கு மறுத்தமையை கண்டித்திருந்தார் அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி.

இவ்வாறான அதிகார கையளிப்பு முரண்பாடு தொடர்பில் இலங்கை உட்பட்ட சில நாடுகளையும் அவர் உதாரணங்களாக காட்டியிருந்தார்.

இந்தநிலையில் மேரி ரொபின்சனின் இந்த கருத்து தொடர்பாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு தமது ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி ரொபின்சன் மற்றும் அவரின் கருத்தை வெளியிட்ட செய்தித்தாள்களின் ஆசிரியர்களுக்கு ரொபின்சனின் கருத்தில் தவறு இருப்பதாக சுட்டிக்காட்டி கடிதம் எழுதியுள்ளார்.

1931 ஆம் ஆண்டு முதல் மக்கள் உலகளாவிய வாக்குரிமையைப் பயன்படுத்தி வரும் ஆசியாவின் மிகப் பழைமையான மற்றும் தடையற்ற ஜனநாயக நாடுகளில் ஒன்று இலங்கை என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சரியான நேரத்தில் நடைபெறும் தேர்தல்களில் இலங்கையில் அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் எப்போதுமே ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டன. அத்துடன் அதிகாரப் பரிமாற்றங்களிலும் விரைவான, மென்மையான மற்றும் அமைதியான போக்கு கடைப்பிடிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒருபோதும் ஒரு கட்சி அல்லது நபர் தேர்தலில் வாக்களித்த மக்களின் தீர்ப்பை ஏற்க மறுக்கவில்லை என்று சரோஜா சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# நாடு முழுவதும் கொரோனா பரவல்கள் ஏற்படும் ஆபத்து

(கொழும்பு)

நாடு முழுவதும் கொரோனா பரவல்கள் உருவாகும் ஆபத்துக்கள் உள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

"ஒரு ஊழியர் அல்லது சிலர் முதலில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பின்னர், அந்த நிறுவனத்தின் ஊழியர்களுக்கு பாரிய அளவில் கொரோனா பரவுவதனை அவதானிக்க முடிகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் பல இடங்களில் இவ்வாறான கொரோனா பரவல்கள் ஏற்படுவதனை நாங்கள் பார்க்கின்றோம். பிரதானமாக இலங்கை பொலிஸ் துறையிலும் சிறைச்சாலையிலும் கடற்படையிலும் கொரோனா பரவல்கள் ஏற்பட்டது.

இது எதிர்பார்க்க கூடிய விடயமாகும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நிறுவனத்தில் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகினால் அது பரவலாக மாறக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தனிமைப்படுத்துவதற்கு பாரிய அளவிலானோர் ஒன்று சேர்கின்றனர். ஒரு நிறுவனத்தில் கொரோனா பரவலாக மாறுவதனைத் தடுக்கும் மிகப்பெரிய பொறுப்பு நிறுவனத்தின் பிரதானிக்கே உள்ளதென அவர் மேலும்சுட்டிக்காட்டியுள்ளார்.(நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சஹ்ரானின் திட்டமல்ல

## நீடிக்கிறது மர்மம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது சஹ்ரான் ஹாசிமின் திட்டமல்ல. அது கண்ணுக்குத் தெரியாத சக்தியொன்றின் தீர்மானம் என சி.ஐ.டியின் முன்னாள் அதிகாரி ரவிசெனிவரட்ண தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவரும் கொல்லப்பட்டும் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த தாக்குதலின் உண்மையான பிரதான சூத்திரதாரி இன்னும் உயிருடன் இருக்கின்றார். சஹ்ரான் ஹாசிமை வழிநடத்திய சக்தியொன்று உள்ளது. அந்த நபரை கைதுசெய்வதற்கான கடுமையான முயற்சிகள் நான் ஓய்வுபெறும் வரை இடம்பெற்றது.

வவுணதீவு, மாவனல்ல, வனாத்துவில்லு சம்பவங்கள் குறித்தும் தாழங்குடா சைக்கிள் குண்டுவெடிப்பு குறித்தும் சி.ஐ.டியினர் ஏற்கனவே விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த தாக்குதலுக்கு சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது சகாக்கள் காரணம் என்பது தெரியவந்தது. சி.ஐ.டி.இது குறித்து தீவிர கவனம் செலுத்தியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஜ-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் தரம் -05 (2020)
புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய
எமது மாணவன்
ரஞ்சன்
அஸ்விகன்
164 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்கு
பெருமை சேர்த்ததையிட்டு பாராட்டி
வாழ்த்துவதுடன் அம்மாணவனுக்கு கற்பித்த
ஆசிரியர் திருமதி.க.சத்தியகுமார்
அவர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(4774)

பாடசாலைச் சமூகம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

DISTRICT SECRETARIAT, JAFFNA
INVITATION FOR BIDS - (IFB 4)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by IFB 4 for works. Please see the above mentioned Invitation for Bids (IFB 4) in Daily News dated 23.11.2020 or on Jaffna District Secretariat website www.jaffna.dist.gov.lk.

Chairman,
Department Procurement Committee,
District Secretariat,
Jaffna.

(C-747)

மணிவிழா வாழ்த்து




கலாநிதி (திருமதி)
எலிசபெத் ஜெயசோதி புத்திசிகாமணி
(ஆசிரிய ஆலோசகர்- வழிகாட்டலும் ஆலோசனையும்)
சேவைக்காலம்: 36 வருடங்கள்
ஓய்வு நாள்: 22.11.2020
தங்களின் கல்விப்பணியைப் பாராட்டி வழ்த்துவதுடன்
ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், நல்லூர்.

(C-724)

# பூஸாவில் தொற்று உயர்வு



(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் மேலும் 11 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக, காலி மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி மேற்படி சிறையிலுள்ள 32 கைதிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அறிக்கைக்கு அமைய, 11 கைதிகளுக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

## ஹோமம் நாளை

(குப்பிழான்)

பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் கொரோனாத் தாக்கத்தினால் அல்லலுறும் உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நாளை செவ்வாய்க்கிழமை காலை சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த யாக வழிபாடுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் நாளை காலை 6.30 மணி முதல் நேரடி ஒலிபரப்பாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-18)



பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச கட்டடத்தில் உலக மீனவ தின நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், மீனவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படம்:- தேவானந்தன்)

## காப்பெற் இடும் பணி ஆரம்பம்



(நெளுக்குளம்)

வவுனியா அரசடி கொக்குவெளிபிரதான வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் விசேட வீதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியாக ஒரு இலட்சம் கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புப் பணிகள் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் 3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வவுனியா அரசடி கொக்குவெளி பிரதான வீதிக்கு காப்பெற் இடும்பணிகள் பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான கு.திலீபனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் இருந்த குறித்த வீதி திருத்தப்பணிகளுக்காக 84 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீதி திருத்தப்பணிகளை ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் வீதியின் அருகில் மரக்கன்றுகளையும் நாட்டிவைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-299)

## இரத்ததான முகாம் பிற்போடப்பட்டது

(குப்பிழான்)

ஏழாலையூர் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நடைபெறவிருந்த இரத்ததான முகாம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை என்றும் குறித்த இரத்ததான முகாம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் இரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (5-4-18)

## குருதிக் கொடையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

(குப்பிழான்)

வைத்தியசாலைகளில் ஏற்பட்டிருக்கும் இரத்தத் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு இரண்டாவது தடவையாக ஹாட்லி மைந்தர்கள் நினைவு நிதியமும் ஹாட்லிக் கல்லூரியும் இணைந்து ஹாட்லி மைந்தர்கள் நினைவாக நடத்தும் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இரத்ததான முகாமை நடத்தவுள்ளமையால் இரத்ததானம் வழங்க உள்ளவர்கள் தங்கள் பெயர், முகவரி, கிராம உத்தியோகத்தர் பிரிவு, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை இன்று 23 ஆம் திகதி காலை 8 மணி முதல் 077 312 2198, 077 919 1529, 077 239 5819 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் ஒன்றிற்கு அனுப்புமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் பதிவுகளை மேற்கொள்ளாமல் மேற்படி இரத்ததான முகாமில்கலந்து கொண்டு குருதிவழங்க முடியாது எனவும் அறிவித்துள்ளனர். (5-4-18)



சர்வதேச மருத்துவ நல நிறுவனத்தினால் முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு 5.6 மில்லியன் பெறுமதியான புதிய Ultrasound Scanner வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டார். (படம்:- தேவானந்தன்)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அதிபரின் கோரிக்கைக்கு அமைய இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினரால் நேற்று தொற்று நீக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 36 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 22 கிலோ 460 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளுக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (5-4-60)

## இழுவைப் படகுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத்தவறின் போராட்டம் முன்னெடுக்கப்படும்

### சமாசத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களை இரு அரசாங்கங்களும் நிறுத்தாவிடின், மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஊடக சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

இந்திய இழுவைப் படகு தொழிலை யாழ்.மாவட்ட கரையோர பகுதிகளில் மேற்கொள்வதனால், நாங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம்.

பலமுறை நாங்கள் எமது பிரச்சினைகளை கூறிய போதும், எமக்கான தீர்வுகள் எட்டப்படவில்லை. ஆகையினால், இன்றைய சர்வதேச மீனவர் தினத்தில், (நேற்று முன்தினம்) ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட கடற்றொழில் அமைச்சர், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், இந்திய துணைத் தூதுவருக்கும் எமது மகஜரை அனுப்பியுள்ளோம்.

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு, எமது கடற்பரப்பில் இழுவைப்படகு தொழிலை செய்யாது முற்றாக தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு முன்னெடுத்தால் மட்டுமே எமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியும்.

இழுவைப் படகுகளை நிறுத்துவதாக இந்தியா பல்வேறு வாக்குறுதிகள் அளித்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கொரோனா சூழ்நிலையைக் காரணம் காட்டி, இலங்கை அரசாங்கம், இந்திய மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது.

எனவே, கொரோனா சூழ்நிலை யைக் காரணம் காட்டாது, உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாங்கள் இந்திய மீனவர்களை பிடித்துத் தருகின்றோம் நீங்கள் சட்ட நடவடிக்கை எடுங்கள் என பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் கூறிய போது, நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் என்றார்கள். ஆனால், இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே இரு அரசாங்கங்களும் உரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கத் தவறின் போராட்டம் முன்னெடுப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். (5-4-101)

# இராசிபலன்

23.11.2020
கார்த்திகை 08, திங்கட்கிழமை
நவமி பின்னிரவு 4.19 மணிவரை
சதயம் பிற்பகல் 5.26 மணிவரை
சுபநேரம் 12.11-1.41 மணிவரை
இராகுகாலம் 7.41-9.11 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்** – உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, பிறர் உதவியுண்டு.

**கடகம்** – உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிம்மம்** – சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி** – கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிரிகள் உதிரியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** – எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** – வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** – மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** – தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** – வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** – உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம்.

தேவையற்ற பணம் பல பாவங்களைச் செய்ய உன்னைத் தூண்டும்

# நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ள 42 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள்


(கொழும்பு)

**உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரை செய்யப்படும் கொரோனா வைரஸிற்கு எதிரான 42 இலட்சம் தடுப்பூசிகள் முதற்கட்டமாக நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

உலக சுகாதார அமைப்பினால் அதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கு தேவையான நடவடிக்கைகள் சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபக தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இதனால் நாட்டிற்கு தேவையான தடுப்பூசிகளின் எண்ணிக்கை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.




அதற்கென சில நடைமுறைகள் உள்ளன. அந்த நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படுகின்றதா?என உலக சுகாதார அமைப்பினால் ஆராயப்படுகின்றது.

சுகாதார அமைச்சினால் அது தொடர்பிலான் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார் என சுட்டிக் காட்டியுள்ளது. (ஜ-4)

# பொலிஸின் கன்னத்தில் அறைந்த நடிகர்

(கொழும்பு)

சிங்கள திரைப்பட நடிகர் வில்சன் கருணாரட்ன, பொலிஸ் அதிகாரி ஒருவரின் கன்னத்தில் அறைந்தமை காரணமாக கைது செய்யப்பட்டார்.

இது குறித்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, முகமூடி அணியாத குறித்த நபரிடம் பொலிஸார் வினவிய போது அவர் குறித்த பொலிஸாரின் கன்னத்தில் அறைந்ததாக தெரிவித்தார்.

இதனையடுத்தே நடிகர் வில்சனை கைது செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மூவர் கைது



(கொழும்பு)

பேலியகொட- நீர் கொழும்பு வீதி- நவலோக சுற்றுவட்டத்திற்கு அருகாமையில் 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன்நேற்று முன்தினம் கைதான பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடமிருந்து 50.70 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதோடு, மற்றைய நபரிடமிருந்து 5.80 மில்லிகிராம் ஹெரோய்ன் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# ஆவணக் காப்பகத்தின் விசேட அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஆவணக் காப்பக திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, முன்கூட்டியே அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆவணக் காப்பக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 011 269 6917 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைப் பதிவு செய்வதற்கும் அச்சகங்களை பதிவு செய்வதற்கும் மற்றுமொரு தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 011 269 4523 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு தேசிய ஆவணக் காப்பக திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# நிதி மோசடியால் நீக்கப்படும் அதிகாரிகள்

(கொழும்பு)

இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் மேலும் 7 அதிகாரிகள் இன்று திங்கட்கிழமை சேவையில் இருந்து நீக்கப்படவுள்ளனர்.

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று முன்தினம் பாராளுமன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்தில் இடம்பெற்ற 90 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பிலேயே அவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2020 - 15.12.2020

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நேரமிது



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். தனாதிபதி சனி உங்கள் இராசியில் சஞ்சரித்து பரிவர்த்தனை யோகம் பெறுகின்றார். எனவே இம் மாதம் நீங்கள் நினைத்தது நிறைவேறும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நேரமிது.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சுக்கிரன். அவர் நவம்பர் 17 ஆம் திகதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். லாபாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதார விருத்தி ஏற்படும். புதிய தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் நிறைவேறும். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

நவம்பர் 24 ஆம் திகதி, மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். புத்திர ஸ்தானாதிபதி செவ்வாய் பலம்பெறும் இந்த நேரத்தில், பிள்ளைகளால் பெருமை சேரும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அனுகூலமான தகவல் வந்து சேரும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

நவம்பர் 25 ஆம் திகதி, விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். இதன் விளைவாக மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை, முன்னின்று நடத்துவீர்கள். தொழிலில் பணிபுரிபவர்கள் அல்லது தொழிலில் பங்கு பெறுபவர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் பற்றிச் சிந்திப்பீர்கள். பயணத்தால் விரயம் உண்டு.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**

டிசெம்பர் 9 ஆம் திகதி, மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலம்




ஒரு இனிய காலமாகும். நிழல்போல தொடர்ந்து வந்த பிரச்சினை படிப்படியாகக் குறையும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி வெற்றிபெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். பல நாட்களாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது படிப்படியாக நடைபெறும்.

**தனுசு இராசியில் புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நீண்ட நாட்களாக முடிவெடுக்காத பிரச்சினைகளுக்கு இப்பொழுது முடிவெடுப்பீர்கள். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வரலாம்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். குடும்பச்சுமை கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளிப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகலும். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். சகோதர வர்க்கத்தினரின் பாசமழையில் நனைவீர்கள். பிள்ளைகளின் கல்யாணம், கல்விசம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

## நீண்ட நாள் கனவுகள் நனவாகும்



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் உங்களுக்கு நடைபெறுகின்றது. எனவே விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். இராசிநாதன் குரு பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் பெரிய அளவில் பயப்படத் தேவையில்லை.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சுக்கிரன். அவர் நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசிக்கு வருகின்றார். தொழில் ஸ்தானாதிபதி தொழில் ஸ்தானத்திற்கே வரும் இந்த நேரம், தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகளில் இருந்த தடை அகலும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சொந்த பந்தங்களால் வந்த துயர் விலகும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

நவம்பர் 24 ஆம் திகதி, மீன இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய். வக்கிர நிவர்த்தியாகும் இந்த நேரத்தில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். வாடகைக் கட்டடத்தில் நடத்திய தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

நவம்பர் 25 ஆம் திகதி, விருச்சிக இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஜீவன ஸ்தானம் பலப்படும். எனவே பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட மீண்டும் பணியில் சேர வாய்ப்புகள் வரும். வெளிநாட்டு முயற்சி கைகூடாவிட்டாலும் வெளிமாநிலங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த பிரச்சினைகள் அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம்.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**




டிசெம்பர் 9 ஆம் திகதி, மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு சுக இலாபாதிபதியாக விளங்கும் செவ்வாய், சுக ஸ்தானத்திலேயே வீற்றிருப்பது நல்லது. அதன் விளைவாக உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும். சகோதர பாசம் கூடும். நீண்ட நாள் கனவுகள் நனவாகும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**தனுசு புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 12 ஆம் இடத்திற்கு வருவது யோகம்தான். இக்காலத்தில் நினைக்க இயலாத யோகங்கள் வரலாம். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

இம்மாதம் சனிக்கிழமை விரதமிருந்து அனுமனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் எதிர்பாராத விரயங்கள் உருவாகும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. தாய் மற்றும் சகோதரத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது.

பணிபுரியும் பெண்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷம் வழங்கும். (தொடரும்)

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

01

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இக் கட்டுரையில் இலங்கைப் பாராளுமன்ற அலுவல்களும் அதன் நடைமுறைகளும் பற்றி அலசப்படுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து பெறப்பட்டவையாகும்.

### பாராளுமன்ற முறைமையின் பரிணாமம்

காலனித்துவ காலத்துக்கு முன்னர் இலங்கை ஒரு முடியாட்சி நாடாகத் திகழ்ந்தது. அதன் பின்னர் போர்த்துக்கேய, ஒல்லாந்த மற்றும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் கீழ், நிர்வாக மற்றும் அரசாங்க மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

முதலில் கரையோர ஒல்லாந்தர் ஆட்புலங்களும் அதனைத் தொடர்ந்து கண்டி இராச்சியமும் 1815 ஆம் ஆண்டில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தது. ஹோல்புறூக்- கெமரன் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கிணங்க நிறைவேற்றுப் பேரவையும் சட்டவாக்கப் பேரவையும்.காலனித்துவ இலங்கையின் முதலாவது சட்டவாக்க சபைகள், 1833 ஆம் ஆண்டு ஆளுநர் சேர் றொபட் ஹோட்டன் என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

1944 ஆம்ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவினரால் வெஸ்ட்மினிஸ்டர் மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது. பாராளுமன்றமானது, மகாராணியையும் (மகாராணி மகா தேசாதிபதியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார்) செனட் சபை, பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டு சபைகளையும் கொண்டிருந்தது. பிரதிநிதிகள் சபையில் 101 உறுப்பினர்கள் இருந்தனர்.

செனட் சபையில் 30 உறுப்பினர்கள் இருந்தனர். செனட் சபை உறுப்பினர்களில் 15 பேர் பிரதிநிதிகள் சபையினரால் தெரிவு செய்யப்பட மற்றும் 15 பேர் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். 1971 ஒக்டோபர் 2 ஆம் திகதி செனட் சபை இல்லாமலாக்கப்பட்டது. அரசியலமைப்புச் சீர்திருத்தம் காரணமாக சட்டமன்றத்தின் பெயர் பல முறை பின்வருமாறு மாற்றப்பட்டது.

(1) சட்டவாக்கப் பேரவை 1833-1931 - (49 உறுப்பினர்கள்), (2) ராஜ்ய சபை 1931-1947 - (61 உறுப்பினர்கள்), (3) பிரதிநிதிகள் சபை 1947-1972 - (101 உறுப்பினர்களும் 1960 இன் பின்னர் 157 உறுப்பினர்களும்), (4) தேசிய அரசுப் பேரவை 1972-1978 - (168 உறுப்பினர்கள்), (5) பாராளுமன்றம் 1978 - இற்றைவரை - (225 உறுப்பினர்கள்.

### பாராளுமன்றக் கட்டடங்கள்

**இக் கட்டுரையில் இலங்கைப் பாராளுமன்ற அலுவல்களும் அதன் நடைமுறைகளும் பற்றி அலசப்படுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து பெறப்பட்டவையாகும்.**

பிரித்தானியக் குடியேற்ற அரசாங்கத்தின் கீழ், இலங்கையின் நிறைவேற்றுப் பேரவை, இலங்கை சட்டவாக்கப் பேரவை ஆகியன 1833 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட போது, இந்த அவைகள் கொழும்பில் உள்ள கோர்டன் கார்டன்சிற்கு எதிரில் உள்ள கட்டடம் ஒன்றில் இருந்தன. இக்கட்டடம் தற்போது "குடியரசுக் கட்டடம்" என அழைக்கப்படுகிறது. இங்கு இப்போது இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சகம் அமைந்துள்ளது.

காலிமுகத்திடலுக்கு எதிரே உள்ள பாராளுமன்றக் கட்டடம் 1930, ஜனவரி 29 இல் இலங்கைக்கான பிரித்தானிய ஆளுநர் சேர் ஹெர்பர்ட் ஸ்டான்லி என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு இலங்கை அரசாங்க சபை (1931-1947), இலங்கை பிரதிநிதிகள் சபை (1947-1972), தேசிய அரசுப் பேரவை (1972-1977), இலங்கை பாராளுமன்றம் (1977-1981) ஆகியவற்றின் அமர்வுகள் இடம்பெற்றன. இன்று இக்கட்டடம் ஜனாதிபதியின் செயலகமாக இயங்குகிறது.

இலங்கைச் சட்டவாக்கச்சபைக் கட்டிடம்
"குடியரசுக் கட்டடம்"



பழைய பாராளுமன்றம்
(ஜனாதிபதி செயலகம்)



மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் பலம் மிக்க பிரதம அமைச்சரான நிஸ்ஸங்க அழகேஸ்வராவின் அரண்மனை அமைந்திருந்த ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரில் தியவன்ன நதியில் அமைந்துள்ள 12 ஏக்கர் தீவில் புதிய பாராளுமன்றத்தின் நிர்மாணம் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது. இக்கட்டடம் ஜெஃப்ரி பாவா என்பவரால் வடிவமைக்கப்பட்டு 1982 ஏப்ரல் 29 இல் இக்கட்டடத்தை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தனா திறந்து வைத்தார்.

இதுவரை இருந்த சட்டவாக்கச் சபைகளின் (பாராளுமன்றங்களின்) ஆயுட்காலங்கள் அட்டவணை-1 மற்றும் அட்டவணை-2 இல் தரப்பட்டுள்ளன.

பாராளுமன்றம் - ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே



### பாராளுமன்றத்தின் சபாமண்டபம் (Chamber)

செவ்வக வடிவான சபாமண்டபம், முழுக்கட்டடத்தினதும் மையப்பகுதியில் இரண்டு மாடிகளின் உயரத்தை உள்ளடக்குகின்றது. இம் மண்டபத்தில் மன்னர்களினதும் கோவில்கள் மற்றும் கோறளைகளினதும் கொடிகள், விருதுகள், பதாகைகள் என்பனவற்றில் 18 வெள்ளிக் கொடிகளாக, கறையற்ற உருக்கினாலான கம்பங்களில் அலங்காரமாகக் காட்சியளிக்கின்றன.

இவையும், சபாமண்டபத்துக்கு மேல், ஓர் அகல் வட்டத்தில் காணப்படும், ஏழு அடி உயரமான இலங்கையின் தேசிய சின்னமும், சபாமண்டபத்திற்கு அதற்குரிய மேன்மையை அளிக்கின்றன. குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கூடியதாக சபாமண்டபம் 232 ஆசனங்களைக் கொண்டுள்ளதோடு இவ்வாசனங்கள் சபாநாயகரின் ஆசனத்திற்கு இருபுறமும் 116 ஆசனங்கள் வீதம் வைக்கப்பட்டுள்ளன. (படம்-1)

சபாமண்டபத் தென்கோடியின் நடுப்பகுதியில் சபாநாயகரின் ஆசனம் வைக்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் ஆசனத்திற்கு உடனடுத்து கீழாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோருக்கான மேசை காணப்படுகின்றது.

சபாமண்டப எல்லைக்கு வெளியே சபாநாயகரது ஆசனம் தென்படக்கூடிய வகையில் படைக்கலச்சேவிதர் மற்றும் பிரதிப் படைக்கலச் சேவிதரின் ஆசனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், சபாமண்டபத்தின் கீழ்ப் பகுதியில் சில விசேட நோக்கங்களுக்கான கூடங்கள் உள்ளன.

**அட்டவணை-1 பாராளுமன்றமும் ஆயுட்காலமும் 1931- 1978**

| பாராளுமன்றம் | ஆயுட் காலம் | ஆண்டு |
|---|---|---|
| முதலாவது அரசுப் பேரவை | 4 வருடம் 5 மாதம் 1 நாள் | 1931-1935 |
| இரண்டாவது அரசுப் பேரவை | 11 வருடம் 3 மாதம் 18 நாள் | 1936-1947 |
| முதலாவது பாராளுமன்றம் – சனப் பிரதிநிதிகள் சபை | 4 வருடம் 5 மாதம் 25 நாட்கள் | 1947-1952 |
| இரண்டாவது பாராளுமன்றம் - சனப் பிரதிநிதிகள் சபை | 3 வருடம் 8 மாதம் 10 நாட்கள் | 1952-1956 |
| மூன்றாவது பாராளுமன்றம் - சனப் பிரதிநிதிகள் சபை | 3 வருடம் 7 மாதம் 17 நாட்கள் | 1956-1959 |
| நான்காவது பாராளுமன்றம் - சனப் பிரதிநிதிகள் சபை | 24 நாட்கள் | 1960-1960 |
| ஐந்தாவது பாராளுமன்றம் – சனப் பிரதிநிதிகள் சபை | 4 வருடம் 4 மாதம் 13 நாட்கள் | 1960-1964 |
| ஆறாவது பாராளுமன்றம் – சனப் பிரதிநிதிகள் சபை | 4 வருடம் 11 மாதம் 20 நாட்கள் | 1965-1970 |
| ஏழாவது பாராளுமன்றம் – சனப் பிரதிநிதிகள் சபை | 1 வருடம் 11 மாதம் 15 நாட்கள் | 1970-1972 |
| முதலாவது தேசிய அரசுப் பேரவை | 4 வருடம் 11 மாதம் 26 நாட்கள் | 1972-1977 |
| இரண்டாவது தேசிய அரசுப் பேரவை | 1 வருடம் 1 மாதம் 3 நாட்கள் | 1977-1978 |

(தொடரும்...)

## உணவு விஷமானதால் 78 பசுக்கள் உயிரிழப்பு

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தானில் கால்நடை பண்ணையில் ஒரே நாளில் 78 பசுக்கள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தானின் சுரு மாவட்டத்துக்கு உட்பட்ட சர்தார்ஷகார் அருகே உள்ள பிலியுபாஸ் ராம்புரா கிராமத்தில் அரசு உதவி பெறும் கால்நடை பண்ணை ஒன்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இரவுமுதல் நேற்றுமுன்தினம் இரவு வரை 78 பசுக்கள் அடுத்தடுத்து உயிரிழந்தன. மேலும் சில பசுக்கள் நோய் வாய்ப்பட்டுள்ளன.

ஒரே நாளில் நிகழ்ந்த இந்த 78 பசுக்களின் மரணத்துக்கான காரணம் குறித்து மாநில கால்நடைத்துறை அதிகாரிகள் நேரில் சென்று விசாரணை நடத்தினர். மேலும் அந்த பசுக்களுக்கு வழங்கப்பட்ட உணவின் மாதிரியை எடுத்து ஆய்வகத்துக்கு பரிசோதனைக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. உண்ட உணவு விஷமானதால் இப் பரிதாபம் நிகழ்ந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி-4)

# நம்பிக்கை ஒளிவட்டம் தெரிகிறது

## தடுப்பூசி குறித்து குட்டரெஸ்



(ஜெனிவா)

**கொரோனா தடுப்பூசியின் சமீபத்திய முன்னேற்றங்களில் நம்பிக்கையின் ஒளி தெரிகிறது என ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் கொரோனா வைரஸை ஒழிப்பதற்கான தடுப்பூசி மனிதர்களிடம் இறுதிக்கட்ட சோதனையில் உள்ளன.

அமெரிக்காவின் பைசர் நிறுவனம் ஜெர்மனியின் பயான்டெக் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள தடுப்பூசி கொரோனாவை ஒழிப்பதில் 95 சதவீதம் திறன் வாய்ந்தது என அந்நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

மேலும், கொரோனா வைரஸ் சிகிச்சைகள் மற்றும் மருந்துகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக உலகளாவிய ஒத்துழைப்பை அதிகரிக்க ஜி 20 நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

கொரோனா தடுப்பூசிகளின் சமீபத்திய முன்னேற்றங்களில் நம்பிக்கையின் ஒளி தெரிகிறது. ஆனால் அந்த நம்பிக்கையின் ஒளி அனைவரையும் சென்றடைய வேண்டும். அதாவது தடுப்பூசிகள் உலகளாவிய பொது நன்மையாக கருதப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். எல்லா இடங்களிலும் அனைவரும் அணுகக்கூடிய மற்றும் மலிவு விலையில் கிடைக்கக்கூடிய மக்களுக்கான தடுப்பூசிகள் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கறுப்பினத்தவர் அடித்துக் கொலை மக்கள் திரண்டு போராட்டம்



(பிரேசிலியா)

தெற்கு பிரேசிலில் உள்ள போர்ட்டோ அலெக்ரே நகரத்தில் உள்ள பல்பொருள் அங்காடியில், கறுப்பினத்தவரான ஜோவோ அல்பெர்டோ என்ற நபர் அங்குள்ள பாதுகாவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பல்பொருள் அங்காடி போராட்டக்காரர்களால் சூறையாடப்பட்டது. தற்போது, பிரேசில் முழுவதும் கறுப்பினத்தவர் உரிமை மீட்பு முழக்கங்கள் எழத் தொடங்கியுள்ளன. பிரேசில் நாட்டில் ஏற்கனவே கறுப்பின மக்களுக்கான உரிமை குறித்து பல்வேறு போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், இந்த சம்பவம் அங்குள்ள மக்களிடையே மேலும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் நடந்த பல்பொருள் அங்காடியின் முன்பு மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்திற்கு குறித்த நிறுவனம் சார்பில் வருத்தம் தெரிவித்ததோடு, இதில் சம்பந்தப்பட்ட காவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# 100 ஆண்டுகளுக்கு முன் திருடப்பட்ட சிலை

## இந்தியாவிடம் ஒப்படைத்த கனடா



(டொரண்டோ)

100 ஆண்டுகளுக்கு முன்னர் வாரணாசியில் இருந்து திருடப்பட்ட அன்னபூரணி சிலையை இந்தியாவிடம் கனடா ஒப்படைத்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலத்தில் காசி என்று அழைக்கப்படுகிற வாரணாசியில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கோவிலில் இருந்து திருடப்பட்ட அன்னபூரணி தெய்வ சிலை, கனடா நாட்டில் உள்ள ரெஜினா பல்கலைக்கழகத்தின் மெக்கென்சி கலைக்கூடத்தில் இருந்துள்ளது.

இந்தச் சிலை 100 ஆண்டுகளுக்கு முன்னர் வாரணாசியில் இருந்து களவாடப்பட்ட சிலை என்பதை திவ்யா மெஹ்ரா என்ற கனடா நாட்டு கலைஞர் ரெஜினா பல்கலைக்கழகத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இந்தச் சிலை, இந்து தெய்வமான அன்னபூரணியின் சிலை என்பதை இந்திய மற்றும் தெற்காசிய கலைகளின் கண்காணிப்பாளர் டாக்டர் சித்தார்த்த ஷா அடையாளம் காட்டினார்.

அதைத் தொடர்ந்து இந்தச் சிலையை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்காக கனடா நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-4)

# "மான்புக்கர்" பரிசை வென்றது ஸ்கொட்லாந்து எழுத்தாளரின் நாவல்




(லண்டன்)

இலக்கியத்துக்காக வழங்கப்படும் உலகின் மிக உயர்ந்த பரிசுகளில் ஒன்றான புக்கர் பரிசு, ஸ்கொட்லாந்து எழுத்தாளர் டக்ளஸ் ஸ்டூவர்ட் எழுதிய 'ஷக்கி பெயின்' என்ற நாவலுக்கு வழங்கப்பட்டது.

பல நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களின் படைப்பில் வெளியான நூல்கள், நாவல்கள் மற்றும் புதினங்களில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பிரிட்டன் நாட்டில் வெளியிடப்படும் நாவல்களில் ஆண்டுதோறும் சிறந்த நாவல் தேர்வு செய்யப்பட்டு அதற்கு 'மான்புக்கர் பரிசு' அளிக்கப்படுவது வழக்கம்.

கடந்த 50 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் வழக்கப்படி, இந்த ஆண்டிற்கான சிறந்த நாவலை தேர்வு செய்ய தலைநகர் லண்டனில் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட தேர்வுக் குழுவினர் பல நாவல்களைப் படித்து, அவற்றில் சில நவல்களை அரையிறுதிச் சுற்றுப் போட்டிக்கு தேர்வு செய்தனர்.

இறுதிச் சுற்றுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எழுத்தாளர் அவ்னி தோஷியின் "பிரண்ட் சுகர்" என்ற நாவல் உட்பட 6 புத்தகங்கள் தேர்வாகின.

இந்நிலையில், அமெரிக்காவில் வசிக்கும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த எழுத்தாளர் டக்ளஸ் ஸ்டூவர்ட் எழுதிய "ஷக்கி பெயின்" நாவல் புக்கர் பரிசிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத்திற்காக ஓர் குடும்பம் எதிர்கொள்ளும் போராட்டம் மற்றும் அந்தப் போராட்டங்களுக்கு இடையில் சோர்ந்துபோன பெற்றோர்களை நேசிக்கும் குழந்தைகள் பற்றியது இந்தப் புத்தகம். (நி-4)

# போதைக்காக கிருமிநாசினி குடித்த எழுவர் மரணம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் போதைக்காக கிருமி நாசினியை குடித்த 7 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள டாட்டின்ஸ்கி என்ற மாவட்டத்தை சேர்ந்த சிலர் போதைக்காக மதுவுக்கு பதில் கிருமி நாசினியை குடித்துள்ளனர். அடுத்த சில மணி நேரத்தில் அவர்களுக்கு வாந்தி,மயக்கம் போன்ற உபாதைகள் ஏற்பட்டன. இதையடுத்து அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளித்த போதும் சிகிச்சை பலனளிக்காமல் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். (நி-4)

# பார்கின்சன் நோயால் புடின் பாதிப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி புடின் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், அவர் தற்போது ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளா டிமிர் புடின் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக முதன் முறையாக அம்பலப்படுத்திய அரசியல் ஆய்வாளரான பேராசிரியர் வலேரி சோலோவி. எதிர்வரும் பெப்ரவரி மாதம் அவருக்கு அவசர அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் எனவும். அதற்கு முன்னர் ஜனவரியில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-4)

# கடன் அட்டைகளின் பாவனையால் வெளிநாடுகளுக்கு கோடிக்கணக்கில் வரி

## விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

**வரவு-செலவு திட்டமொன்று முன்வைக்கும் வேளையில் இதுதான் சிறந்த வரவு-செலவுத் திட்டம் என ஆளும் கட்சியும், இதுதான் மோசமான வரவு- செலவுத் திட்டம் என எதிர்க்கட்சியும் கூறுவதே வழக்கம். ஆனால் இது அரசாங்கத்திற்கு மாத்திரம் சார்ந்த விடயம் அல்ல, முழு நாடு சார்ந்த விடயம்.**

அடுத்த ஆண்டிற்கான மொத்தச் செலவை கையாள 3000 பில்லியன் கடன் பெற வேண்டியுள்ளது. சர்வதேச கடன்களை பெற்றுக்கொண்டால் தேசிய ரீதியில் எவ்வாறு செலவுகளை கட்டுப்படுத்துவது என கருத்தில் கொள்ளவேண்டும் என ஆளும் தரப்பு உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு கணிப்பின் பிரகாரம் ஒரு ஆண்டில் 412 கோடி ரூபாய்கள் கடன் அட்டைகளின் மூலமாக வெளிநாடுகளுக்கு வரியாக செலுத்தியுள்ளோம்.

எனவே இதில் ஆளும் எதிர்க்கட்சிகள் இணைந்தே தீர்வொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். 2021 ஆம் ஆண்டுக்கு 3000 பில்லியன் கடன் தேவைப்படுகின்றது. இந்த தொகை முழுமையாக எமக்கு கிடைக்கும் என கூற முடியாது.

ஆனால் நாம் வரையறுத்துள்ள தொகையை விடவும் அதிக கடன்களை நாம் பெற்றுக்கொள்ள நேரும். இதனை தேசிய ரீதியில் எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதையும் ஆராய வேண்டும்.

நாட்டு மக்களின் கைகளில் பணம் புழங்கினால் அது ஆரோக்கியமான விடயம். ஆனால் இன்று நாட்டின் அனர்த்த நிலையில் மக்களிடம் பணம் இல்லை. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய அடியாக விழும். எனவே புதிதாக பணம் அச்சிட வேண்டும். அதேபோல் எமது பணம் வெளிநாடுகளுக்கு செல்வதையும் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் இங்கு கடன் அட்டைகளில் வியாபாரம் செய்யும் வேளையில் அதில் ஒரு தொகை வெளிநாட்டிற்கு செல்கின்றது.

இதனை தவிர்க்க தேசிய ரீதியில் மாற்றம் ஒன்றினை மேற்கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு கணிப்பின் பிரகாரம் ஒரு ஆண்டில் 412 கோடி ரூபாய்கள் கடன் அட்டைகளின் மூலமாக வெளிநாடுகளுக்கு வரியாக செலுத்தியுள்ளோம்.

எனவே கியூ.ஆர்.முறைமையை 2018 ஆம் ஆண்டில் கொண்டுவந்தமை வெற்றியளித்தது. ஏனைய நாடுகளும் இந்த திட்டத்தை கையாண்டு வெற்றி கண்டுள்ளனர். இந்தியா இதற்கு நல்லதொரு உதாரணம்.



எனவே நிதி அமைச்சு இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும், மத்திய வங்கி என்னதான் முயற்சிகளை எடுத்தாலும் நிதி அமைச்சு இதில் அக்கறை செலுத்தியாக வேண்டும். சுயாதீன நிறுவனங்கள் அரசியல் மயமாவதை தடுக்க வேண்டும்.

குறிப்பாக மத்திய வங்கியில் அரசியல் தலையீடுகள் இருந்ததன் காரணமாகவே இலங்கையைச் சேராத ஒருவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஆனார். ஆகவே இந்த செயற்பாடுகள் தடுக்கப்படும் விதமாக நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும் என்றார். (நி-7)

# பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் அஞ்சத் தேவையில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

கொரோனாவை கட்டுப்படுத்தும் செயலணி மற்றும் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாடும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.




பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது பாடசாலைகளை ஆரம்பிக்க முடியுமா? என ஒத்திகை பார்ப்பதற்காக அல்ல எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் உள்ள அனைத்து பாடசாலைகளும் நாளை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நீதி விசாரணை

மனுநீதிச் சோழன் வரலாறு நமக்குத் தெரியும். அது மாதிரி நீதி தவறாத ஆட்சியாளர்கள் பலபேர் இருந்திருக்கின்றார்கள். இந்த உலகத்திலே..ஹுரத் உமர்பின் கத்தாப் (ரலி) என்று ஒருத்தர் இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா இவர். அவருடைய ஆட்சிக் காலத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சி. அந்த மன்னருக்கு ஒரு மகன். அவர் பெயர் அபூ ஷஹ்மா. அந்த மிசர் நாட்டு ஆளுநர் அமர்பின் ஆஸ்(ரலி).

அந்த மன்னருடைய மகன் ஆளுநருடைய கவனிப்பிலே இருந்தார்.

அந்தச் சமயத்திலே ஒரு நாள் அவர் மதுபானம் அருந்தினார். ஆளுநருக்கு இது தெரிந்துவிட்டது. என்ன செய்வது?

அவருக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. தவறு செய்தது மன்னருடைய மகன்.. ஆளுநர் யோசனை செய்தார். அவரை மெதுவாக தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அதிகமாக அவரைக் கஷ்டப்படுத்தாமல் ஒரு சிறு தண்டனையைக் கொடுத்து பிரச்சினையைத் தீர்த்துவிட்டார்.

ஏதோ பேருக்கு ஒரு தண்டனை...அவ்வளவு தான்.

இது நடந்து கொஞ்ச நாள் கழித்து மன்னருக்கு இந்த விடயம் தெரிய வந்தது. தன்னுடைய மகன் என்பதனால் ஆளுநர் இலேசான தண்டனையோடு விட்டுவிட்டார் என்பதை புரிந்து கொண்டார். உடனே ஆளுநருக்குத் தகவல் அனுப்பினார். அமர்வின் ஆஸ் அவர்களே என்னுடைய மகன் மதுபானம் அருந்தியிருக்கின்றான். அது உங்களுக்குத் தெரிந்தவுடன் தண்டனை கொடுத்திருக்கின் றீர்கள். கலீபாவின் மகன் என்கின்ற காரணத்தினாலே குறைவான தண்டனையைக் கொடுத்ததாகக் கேள்விப்படுகின்றேன். இது ஷரீ அத்தின்படி மாபெரும் குற்றம். எங்களுடைய நடத்தையும் மன்னிக்கக்கூடியதல்ல ...இந்தக் கடிதம் கண்டவுடனே மகன் அபூஷஹ்மாவை மதீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது என்று கடிதம் எழுதினார். அதைப் பார்த்தார் ஆளுநர். உடனே கலிபாவின் மகனை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்.

மன்னர் முன்னால் நீதி விசாரணை நடந்தது....அதன்படி தன்னுடைய மகனுக்கு சவுக்கடி வழங்கும்படியாக உத்தரவிட்டார் ஹஜரத் உமர் கத்தாப். தண்டனை நிறைவேற்றப்பட்டது. கூடியிருக்ந்தவர்கள் எல்லாம் ஐயா... கொஞ்சம் கருணை காட்டுங்கள்... என்று சொல்லி மன்னரிடம் வேண்டிக் கொண்டார்கள். அந்த வேண்டுகோளை மன்னர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சொன்னார். நீதியின் முன்னால் தந்தை-மகன் அன்பு- நேசம் உறவு முறைகளையெல்லாம் கவனிக்க முடியாது.. குற்றம் செய்தவர் தண்டிக்கப்பட வேண்டியவர். அவர் யாராக இருந்தாலும் சரி.. என்றார். எல்லா ஆட்சியாளர்களுமே கவனிக்க வேண்டிய ஒரு செய்தி இது..

அவர் ஒருநாள் தன்னுடைய அரசாங்க கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்திலே அவரைப்பார்க்க ஒரு பெரிய மனிதர் வந்தார். இவர் தன்னுடைய சொந்த வேலை காரணமாக வந்திருக்கின்றார் என்பதை அவர் புரிந்து கொண்டார். உடனே அதுவரைக்கும் எரிந்து கொண்டு இருந்த விளக்கை அணைத்து விட்டு இன்னொரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டார். இந்தச் செயலுக்கு என்ன காரணம் என்று கேட்டிருக்கின்றார் வந்தவர். இதற்கு அவர் சொன்னார்.

ஐயா... நீங்கள்.. வந்தபோது இங்கே எரிந்து கொண்டிருந்தது அரசாங்க விளக்கு... இப்பொழுது எரிவது சொந்த விளக்கு... சொந்த விடயங்களை பேசுகின்றபோது அரசாங்கப் பணத்தை செலவு செய்யக் கூடாது இல் லையா... அதனால்தான் விளக்கை மாற்றினேன் என்றார்.

இப்படியெல்லாம் பலபேர் இந்த உலகத்திலே இருந்திருக்கின்றார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் பலபேர் அப்படி இருப்பதில்லை. இப்பொழுதும் ஒருவர் அப்படித்தான் அரசாங்க விடயங்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்திலே ஒரு பெரிய தொழிலதிபர் அவரைப் பார்க்க வந்தார். இவர் சடார் என்று எழுந்து... எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டார் எங்கும் ஒரே இருட்டு.

ஏன் விளக்கை அணைத்துவிட்டீர்கள்...என்று கேட்டார். வந்தவர்.

இங்கே நடப்பது மற்றவர்கள் கண்களில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக விளக்கை அணைத்தேன்.. நீங்கள் கொண்டு வந்திருக்கின்றதை அப்படி ஒரு ஓரமாக வைத்து விட்டுப் போங்கள். அதன்பின்பு விளக்கைப் போட்டுக் கொள்கின்றேன் என்றார் இவர்.

# சூறாவளி ஏற்படும் வாய்ப்பு விடுக்கப்பட்டது எச்சரிக்கை

**(கொழும்பு) சூறாவளி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வசிக்கும் மக்களை விழிப்புடன் இருக்குமாறு வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றின் ஒரு சுழற்சி செயற்பாடு காரணமாக நேற்று முன்தினம் காலை முதல் குறித்த பகுதி குறைந்த அழுத்தப் பகுதியாக (2N10N, 83E-93E) உருவாகியுள்ளது.

இதன் காரணத்தினால் தெற்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தின் மத்திய பகுதியில் இன்று ஒரு தாழமுக்க வலயம் உருவாகும் சாத்தியம் உள்ளது என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தாழமுக்க வலயம் மேற்கு-வடமேற்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக நாட்டில் பலத்த மழை, இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் மற்றும் இத் தாழமுக்கம் காற்றின் வேகத்தை திடீரென அதிகரிக்கலாம் எனவும் வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடற்படை மற்றும் மீன்பிடி சமூகங்கள் கிழக்கு நோக்கி கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் வட-மத்திய மாகாணங்களில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அவசர உதவிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர அழைப்பு இலக்கம் 117 ஊடாக தொடர்பு கொள்ளும்படி தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பலவீனப்படுத்தியவர்கள் பலம் பற்றிப் பேசுகின்றனர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தடுக்காமல் மத்திய வங்கிக் கொள்ளையை நியாயப்படுத்தியவர்கள் இன்று அரசாங்கத்தின் பலவீனம் குறித்து பேசுகின்றனர் என அமைச்சர் விமல் வீரவன்ச சபையில் சுட்டிக்காட்டினார்.

நாம் இன்று கடுமையான பயணத்தை ஆரம்பிக்க முன்னைய ஆட்சியாளர்களே காரணமாகும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை, 2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பலவீனமான நிலைமையை உருவாக்கியவர்கள் இன்று அரசாங்கத்தின் பலவீனம் குறித்துப் பேசுகின்றனர்.

6.5 வீத வேகத்தில் சென்ற பொருளாதார வேகத்தை 2.5 வீதத்திற்குக் கொண்டு நிறுத்தியவர்கள் இன்று எமது அரசாங்கத்தின் பலவீனம் குறித்து பேசுகின்றனர்.

அரச வாகனத்தை பயங்கரவாதிகள் பயன்படுத்த இடமளித்த அரசாங்கத்தை நடத்தியவர்கள் இன்று எமது பாதுகாப்பு செலவீனம் குறித்து பேசுகின்றனர். இவர்கள் எமக்கு வெற்றி, தோல்விகள் குறித்து பேச வர வேண்டாம்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்று தனக்கான அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள ஏழு மாதங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

அவ்வாறான மோசமான சட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்கள் இன்று எமது வரவு-செலவுத் திட்டத்தை விமர்சிக்கின்றனர்.

எமது தேசிய தொழிலாளர்கள் சகல விதத்திலும் தயாராக உள்ளனர். அதற்கான சூழலை



நாம் உருவாக்கிக்கொடுக்க வேண்டும். தொழில்நுட்ப, வளமுகாமைத்துவ வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும்.

தேசிய விவசாயத்தை பலப்படுத்த வேண்டும், தேசிய உற்பத்திகளுக்கு சகல வாய்ப்புகளையும் உருவாகிக்கொடுக்க வேண்டும். இதனை இந்த வரவு-செலவுத் திட்டம் சரியாக உருவாக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சிலாபம் மீன் சந்தை தற்காலிகமாக மூடல்

(சிலாபம்)

கொரோனாத்தொற்றுநோயின் இரண்டாவது அலையிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வகையில் சிலாபம் பொது மீன் சந்தை நேற்று முன்தினம் காலை முதல் ஒரு வார காலத்திற்கு மூடப்பட்டுள்ளது.

சிலாபம் நகராட்சி மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொலிஸார், சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து கலந்துரையாடி மீன் சந்தையை மூடுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கிடையில், சில மீன் விற்பனையாளர்கள் மருத்துவ ஆலோசனையை மீறி நகரத்தில் மீன் விற்பனை செய்வதை காண முடிந்தது. மீன் வாங்கும் வாடிக்கையாளர்களும் ஒன்றாகச் சேர்ந்து மீன் வாங்க அந்த இடங்களில் குழுமியிருந்ததை காண முடிந்ததாக சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் 75 ஆவது வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இன்று திங்கட்கிழமை முதல் டிசெம்பர் 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த 17 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் 4 நாட்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், வரவு-செலவுத் திட்டம் 99 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

குறித்த வாக்கெடுப்பின்போது இதற்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

இந்த நிலையிலேயே 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு எனப்படும் குழுநிலை விவாத நடவடிக்கைகள் இன்று முதல் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. (நி-4)

# மத்திய வங்கி ஆளுநர் உட்பட 30 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியதையடுத்து வங்கியின் ஆளுநர் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகள் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுறுதிப்படுத்தப்பட்டவர் இலங்கை மத்திய வங்கியின் அலுவலக ஊழியர் எனவும் மேலும் அவர் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு உணவளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யூ.டி லக்ஷ்மன் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவசர காலங்களில் மத்திய வங்கி சீராக இயங்குவதை உறுதி செய்வதற்காக "அவசர பணிக்குழு" அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சூழ்நிலையிலும் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அத்தியாவசிய சேவைகளும் எந்தவித இடையூறும் இன்றி தொடர்ந்து செயற்படும் என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும்

## ஜீவன் உறுதி



(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் மலையக பிரதேசங்களுக்கு அபிவிருத்திகளுக்காக கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தோட்டத்தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் மக்களின் நலன் கருதி எதிர்க்கட்சி மலையக உறுப்பினர்களும் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் என நம்புகின்றோம் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1980களில் மலையகத்துக்கு தனிவீட்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை 35 ஆயிரத்து 142 தனி வீடுகள் மலையக தொழிலாளர்களுக்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் எனது அமைச்சுக்கு கீழ் தனிவீட்டு திட்டங்களை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த அரசாங்க காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் இருக்கும் மின்சாரம், நீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று மலையகத்துக்காக பல்கலைக்கழகத்துக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு அப்பால் மும்மொழி தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கும் முன்மொழியப்பட்டிருக்கின்றது.

மேலும் தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா என்ற உறுதிமொழி தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினரும் வழங்கியதொன்றாகும். ஆனால் தற்போது அதனை வழங்குவதாக தெரிவித்ததுடன் அதனை எப்படி வழங்கப்போகின்றது.

மலையக மக்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதுடன் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள தேவையான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனால் மலையக மக்களது நலனைக் கருத்திற்கொண்டு எதிர்க்கட்சியினரும் அதற்கு ஆதரவளிக்கும் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஒன்பது மரணங்களும் ஒரேநாளில் நிகழ்ந்ததல்ல



(கொழும்பு)


**சுகாதரார சேவை பணிப்பாளரால் நேற்று முன்தினம் அறிக்கையிடப்பட்ட 9 கொரோனா மரணங்களும் ஒரே தினத்தில் மாத்திரம் பதிவாகவில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இந்த மரணங்களில் நேற்று முன்தினம் 4 பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனரெனவும் ஏனைய 5 பேரும் 2 நாட்களுக்கு முன்னர் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த மரணங்களின் மரண விசாரணை அறிக்கை கிடைத்ததும் அனைத்தும் ஒன்றாக ஒரேநாளில் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## மூல விக்கிரகம்

(தொடர்ச்சி)

எனவே கருங்கற்களில் மூலவர் விக்கிரகங்களை செய்தால் அவற்றில் மிக எளிதாக இறை சக்தியை ஏற்படுத்தி அதன் மூலம் அருள் அலைகளை பெருக்கச்செய்து பயன்பெற முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் தான் கருவறைகளில் மூலவர் விக்கிரகங்கள் கல்லால் வடிவமைக்கப்பட்டவைகளாக அமைந்தன. அதே சமயத்தில் வீதி உலா செல்லும் உற்சவர் மூர்த்தியை பஞ்சலோகங்களால் செய்தனர்.

வெளி இடங்களில் உள்ள சக்தியை கிரகித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் உற்சவர் சிலைகள் உலோகத்தில் செய்யப்பட்டன.

நாளடைவில் மூல விக்கிரகங்களுக்குரிய கற்களைக் கண்டுபிடித்து தேர்வு செய்து அதில் சிலை செய்து அதற்கு இறை சக்தி ஏற்படுத்தும் நுட்பத்தையும் சூட்சுமத்தையும் தமிழர்கள் தெரிந்து கொண்டனர்.

எனவே ஆயிரம் ஆண்டுகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயங்களில் உள்ள மூல விக்கிரகங்கள், சிற்ப சிறப்புகள் மட்டுமின்றி அதன் பின்னணியில் இறை ஆற்றலை வாரி வழங்கும் தன்மைகளை நிரம்ப கொண்டுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லா கருங்கல்லும் இறை ஆற்றலை வெளிப்படுத்தாது. கருங்கல்லில் சூரிய காந்தக்கல், சந்திர காந்தக் கல், அலிக் கல் என்று மூன்று வகைகள் உள்ளன. சூரிய காந்த கற்கள் எப்போதும் சூடாக இருக்கும். இந்த வகை கல்லில் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தும் கடவுள்களான சிவன், வீரபத்திரா, துர்க்கை, காளி போன்ற இறை வடிவங்களை செதுக்குவார்கள்.

சந்திரகாந்தக் கல் எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும். எனவே இந்த வகைக் கல்லில் பெருமாள், புத்தர், தெட்சிணாமூர்த்தி போன்ற கடவுள்களின் வடிவங்களை செய்வார்கள்.

அலிக்கல் என்பது சூடாகவும் இருக்காது. குளிர்ச்சியாகவும் இருக்காது. கல்லைத் தட்டும் போது ஓசையும் வெளியில் வராது. இத்தகைய கற்களில் எந்த மூலவர் சிலையையும் செய்யமாட்டார்கள்.

மூலவர் சிலைகளை பொதுவாக நிற்கும் நிலை (ஸ்தானகம்), அமர்ந்திருப்பது (ஆசனம்), படுத்து இருப்பது (சயனக் கோலம்) என்று மூன்று வகையாக தயாரிப்பார்கள். இந்த மூவகை மூலவர்களை எவ்வளவு உயரம், எவ்வளவு அகலத்தில் படைக்க வேண்டும் என்பதற்கு சிற்ப சாஸ்திர விதிகள் உள்ளன.

சிற்பக் கலையில் நவதாலம் என்று ஒரு அமைப்பு உண்டு. இதன்படி மூலவர் சிலை முகத்தின் நீளத்தை போல 9 மடங்கு சிலையின் மொத்த உயரம் இருக்க வேண்டும் என்பது அந்த அமைப்புக்குரிய விதியாகும். இப்படி அனைத்து விதிகளுடன் சிற்பி தன் கைத் திறமையையும் காட்டும் போது தான் பிரமாதமான மூலவர் சிலை கிடைக்கும். அதற்காக கல்லே கடவுள் ஆகிவிடாது. கல்லிலும் கடவுள் இருக்கிறார் என்பதையே பிரபஞ்ச உண்மை நமக்கு காட்டுகிறது.

பிறகு எப்படி கல் முழுமையான இறை சக்தியை பெறுகிறது என்று நீங்கள் யோசிக்கலாம். சிற்பி செதுக்கும் மூலவர் சிலையை பல வகையான தானியங்கள் ஒவ்வொன்றிலும் 48 நாட்கள் அதாவது ஒரு மண்டலம் வைப்பார்கள். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## பரிசோதனையின்றி நாட்டிற்குள் நுழைய இலங்கைக்கு பாகிஸ்தான் அனுமதி

(கொழும்பு)

பி.சி.ஆர்.பரிசோதனையின்றி தமது நாட்டுக்குள் உள்நுழைய, பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்றி தமது நாட்டுக்குள் உள்நுழைய முடியும் என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, பி.சி.ஆர்.பரிசோதனைகள் இன்றி தமது நாட்டுக்குள் உள்நுழைய மேலும் 20 நாடுகளுக்கு பாகிஸ் தான் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, அவுஸ்திரேலியா, சீனா, மாலைதீவு, சவுதி அரேபியா, ஜப்பான் மற்றும் வியட்நாம் உள்ளிட்ட 20 நாடுகளுக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரித்தானியாவுக்கு பயணிக்கும் இலங்கைப் பயணிகள். இன்று முதல் தனிமைப்படுத்தப்பட மாட்டர்கள் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 167 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்ப முடியாது சிக்கித் தவித்த மேலும் 167 இலங்கையர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாயிலிருந்து 68 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் கொழும்பு நவலோக, லங்கா மற்றும் ஆசிரி தனியார் வைத்திய சாலைகளின் ஊழியர்களால் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து, இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 230 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 120 |
| தக்காளி | 150 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 50 | 70 | 80 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 280-320 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 250 | -- | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 |
| போஞ்சி | 140 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 180 | 240 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 180 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 250 | --- | --- |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | --- | 120 |



# சிறுவர் அரங்கம்

## எறும்பும் வெட்டுக்கிளியும்

வெட்டுக்கிளி ஒன்று மதிய வெயில் நேரத்தில் இங்கும் அங்கும் குதித்து பாட்டுப்பாடி ஆடிக்கொண்டிருந்தது.

அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக்கொண்டு தன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் என்னைப் போல நீயும் என்னுடன் சிறிது நேரம் விளையாடலாமே" என்றது.

அதற்கு எறும்பு "இன்னும் சில நாட்களில் வெயில் காலம் முடிந்து, மழைக்காலம் தொடங்கப்போகிறது. மழைக் காலத்தில் எவரும் வெளியே செல்ல முடியாது. அதனால் அந்த நேரத்திற்கு தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக் கொள்கிறேன்" என்றது.


வெட்டுக்கிளி எறும்பிடம் "மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கிறது. நான் விளையாட செல்கிறேன்" என்று சிரித்துகொண்டே நடனமாடி சென்றது.

நாட்கள் கடந்தன. மழைக் காலமும் வந்தது. அப்போது "எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும். அதனிடம் கேட்டுப்பார்க்கலாம்" என்று நினைத்த வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்குச் சென்றது.

எறும்பின் வீட்டிற்குச் சென்று எறும்பிடம் "எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக்குமா?" என்று கேட்டது. தான் சேமித்த உணவில் இருந்து சிறிதளவை வெட்டுக்கிளியிடம் கொடுத்தது எறும்பு.

பிறகு எறும்பு வெட்டுக் கிளியைப் பார்த்து "அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே. இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நம் இருவருக்கும் உதவியுள்ளது.

எனவே இனிமேலாவது நீ



சோம்பலில்லாமல் வெயில் காலத்தில் மழைக்காலத்திற்கு வேண்டியதை சேமித்து வைத்துக்கொள் என்றது. எறும்பானது கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு என்றும் பிரகாசமாக இருக்கும் என்று வெட்டுக்கிளிக்கு உணர்த்தியது.

**நீதி: எதிர்காலத்திற்கு தேவையானதை நிகழ்காலத்தில் சேமித்து வைக்க வேண்டும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி

இவை எல்லாமே தந்தை தந்தது. எனக்கு எந்தவிதமான ஆபத்தும் வராது. அதுவும் அவரால் நிச்சயம் வராது. கவலைப்படாதீர்கள்.

வெறுமனே ஒப்புக்குத் தலையசைத்துக் கொண்டாளே தவிர உள்ளுக்குள் ஒலிம்பியஸுக்கு ஒருவித பதற்றம் உருவெடுத்திருந்தது. அதேசமயம் பயம் என்பது மருந்துக்குக் கூட அலெக்சாண்டரின் முகத்தில் இல்லை என்பதும் அவளுக்குத் தெரிந்தது.

அங்கிருந்து புறப்பட்டார் அலெக்சாண்டர். ஒலிம்பியஸுக்குச் சமாதானம் சொல்லிவிட் டாரே தவிர மனம் இலேசாக அடித்துக் கொண்டது.

ஏதோ தவறு நடக்கப் போகிறது என் பதை உள்ளுணர்வு சொல்லிக்கொண்டே இருந்தது. அன்று மட்டும் அல்ல அடிக்கடி.

33



ஒலிம்பியஸ்

நாட்கள் கழிந்தன. மன்னர் பிலிப்பிடம் இருந்து முக்கியமான அறிவிப்பு வந்தது. கிளியோபாட்ரா என்கிற பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்.

அன்னை சொன்னது அப்படியே நடந்து விட்டதே! முதல்முறையாக அதிர்ச்சியடைந்தார் அலெக்சாண்டர். என்ன செய்வது? தந்தை தன்னுடைய மனசாட்சிக்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார்.

இதுநாள் வரை அப்படித்தான் இருந்திருக்கிறார். ஒருவேளை மாறியிருந்தால்? தன்னை மாற்றிக் கொண்டிருந்தால்? எதிர்த்து நின்று கேள்வி கேட்க முடியுமா? அப்படியே கேட்டால் மன்னரின் மாண்பு என்ன ஆவது? மாசிடோனியாவின் மகத்துவம் என்ன ஆவது?

நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது அலெக்சாண்டருக்கு. அமைதியாக இருப்பது மட்டும்தான் இப்போதைக்கு நல்லது. அதையே செய்தார்.

மகன் அமைதியாகிவிட்டால் மனைவியும் அப்படி இருக்க வேண்டுமா என்ன? ஆவேசத்துடன் சென்று மன்னர் பிலிப்பிடம் வாக்குவாதத்தில் ஒலிம்பியஸ்.

ஆனால் மன்னர் பிலிப் எதற்கும் அஞ்சவில்லை, அலட்டிக்கொள்ளவில்லை. அவரும் அமைதியாகவே இருந்தார் அலெக்சாண்டரைப் போலவே.

மன்னர் பிலிப் காரியத்தைச் சாதித்துக் கொண்டார். திருமணம் நடந்துவிட்டதால் அலெக்சாண்டர் வெறும் மௌனத்தை மட்டுமே கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. (தொடரும்)

அறிவே கடவுள்; அன்பே வாழ்வு.
ஒன்றில்லாமல் ஒன்றுக்கு சிறப்பில்லை.
- சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மூன்று பெரும் பலம் தமிழர்களுக்குத் தேவை

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் ஒருவருக்குக் கிடைக்குமாயின் அவரின் உயர்ச்சியை – எழுச்சியை யாராலும் தடுக்க முடியாது.

அதன் காரணமாகவே நம் தமிழ் மன்னர்கள் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியருக்கும் விழா எடுத்து வழிபாடு செய்து வீரத்தையும் செல்வத்தையும் கல்வியையும் வேண்டி நின்றனர்.

செங்கோலாட்சி செய்வதற்கு வீரம், செல்வம், கல்வி என்ற முப்பெரும் பலம் அவசியம் என்பது இதனூடு உணர்த்தப்படுகிறது.

ஆக, ஓர் இனம் அடக்குமுறையில் இருந்து மீண்டெழ, உரிமையை பெற்றுக் கொள்ள தனக்குத் தேவை என்ன என்பதை முதற்கண் ஆராய வேண்டும்.

அவ்வாறான கோணத்தில் தமிழினம் தனக்கான பலம் என்ன என்பதை ஆராய்ந்தால், முப்பெரும் பலம் நமக்குத் தேவை என்பது உணரப்படும்.

இங்கு தமிழினத்துக்கான முப்பெரும் பலம் என்பது அறிவியல்சார் நிபுணத்துவம், உள்ளும் புறமுமான ஆதரவு, எங்களுக்குள்ளான ஒற்றுமை என்பதாகும்.

இங்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய புலமைசார்ந்த நிபுணத்துவம் உடையவர்களின் அறிவாற்றல் எமக்குப் மிகப்பெரும் பலம் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதேபோன்று, எம் இனத்துக்கான ஆதரவை உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் நாம் பெருப்பித்துக் கொள்வது அவசியம்.

பொதுவில் எதிர்ப்பு பலமாக இருந்தால் அதனை முறியடிப்பது கடினம்.

ஆகவே ஆதரவுப் பலத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணத்துக்கு அண்டை நாடான இந்தியாவின் ஆதரவு எமக்குக் கட்டாயமானது. இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு சர்வதேச அரங்கில் எங்களுக்கான ஆதரவைத் தேடுவதென்பது நடக்க முடியாத காரியம்.

தவிர, இவையாவற்றுக்கும் மேலாக, தமிழினத்தின் ஒற்றுமை என்பது தவிர்க்க முடியாத பலம்.

எனவே வீணே கருத்து முரண்பாடுகளை உருவாக்கிக் கொண்டு, எங்களை நாங்கள் பலவீனப்படுத்துவது எங்கள் இனத்தை நலிவடையச் செய்வதற்கு ஒப்பானது.

ஆகையால், பகைமை மறந்து தமிழினம் என்ற இனப்பற்றோடு அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒன்றுபட்டு எங்கள் இனத்தின் இருப்புக்காக – எங்கள் மக்களின் வாழ்வுக்காக எமக்குள் நாம் பலப்பட வேண்டும்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட மூன்று பெரும் பலத்தை தமிழினம் ஆக்கிக் கொண்டால், இலக்கை அடைவதில் எந்தத் தடைகளும் இருக்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

# உயிர்நீத்தவர்களுக்கான அஞ்சலியை மக்கள் ஏதோ ஒரு வகையில் மேற்கொள்வர்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மாவீரர் தினத்தை நினைவுகூருவதற்கு வடக்கு, கிழக்கில் அரசாங்கம் பல்வேறு தடைகளை விதித்துள்ள போதும் தமிழ் மக்களுக்காக உயிர்நீத்த மாவீரர்கள் மற்றும் மக்களுக்கான அஞ்சலியை மக்கள் ஏதோ ஒரு வகையில் மேற்கொள்வார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கடந்த மாதம் தியாக தீபம் திலீபனுடைய நினைவேந்தல்களின் போது அவருடைய நினைவு நாள் அஞ்சலி நிகழ்வுகளுக்கும் நீதிமன்ற தடை உத்தரவை எனக்கும் எடுத்திருந்தார்கள். என்னைப் போல பலருக்கும் நீதிமன்ற தடை உத்தரவை எடுத்திருந்தார்கள். அதேபோல நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வுக்குக்கூட இந்த அரசாங்கம் முழுமையான நீதிமன்ற தடை உத்தரவை விடுத்திருக்கிறது.

மேலும் நேற்றிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வர்த்தமானி அறிவித்தலை கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தி இருக்கிறார். இலங்கையினுடைய பொதுமக்களுடைய பாதுகாப்புக்கு முழுமையான பொறுப்பும் இராணுவம் மற்றும் முப்படைக்கும் அந்த பொறுப்பை ஒப்படைப்பதாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நேற்று 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களை நசுக்கி, அவர்களை மிரட்டி யுத்தத்தை வழி நடத்திய போது, தமிழ் மக்கள் எப்படி அச்ச உணர்வுகளோடு இருந்தார்களோ அதே அச்ச உணர்வை தொடர்ச்சியாக தக்க வைத்து தங்களுடைய குடியேற்றங்களை குறிப்பாக தமிழ் மக்கள் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படாமல் விடுத்து அச்ச உணர்வு இருக்கின்றபோது, வடக்கு, கிழக்கில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை மிக விரைவாக செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சியை மேற்கொண்டு வருகின்றது என்றார். (ஞா)

## சித்திரை புத்தாண்டுக்கு பின்னர் மாகாண சபைத் தேர்தல்?

(கொழும்பு)

அடுத்தாண்டு சித்திரை புத்தாண்டுக்கு பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உத்தேசித்திருந்த போதிலும் கொரோனாத் தொற்று நோயை ஒழித்து விட்டு தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவிருந்த நிலையில், எல்லை நிர்ணய பிரச்சினை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

சில மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிந்து தற்போது இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் ஆகியுள்ளன.

எவ்வாறாயினும் மாகாண சபைத் தேர்தல்களை பழைய தேர்தல் முறைக்கு அமைய நடத்துவதா? அல்லது புதிய முறைமைக்கமைய நடத்துவதா? என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

பழைய முறையில் தேர்தலை நடத்த வேண்டுமாயின் அது தொடர்பான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்து, நிறைவேற்றிய பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் தேர்தலை நடத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** பெரியபொக்கணை, வாதரவத்தை, வட்டுக்கோட்டை, அராலி பிரதேசம், சாட்டி, செட்டிப்புலம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பண்டாரிக்குளம் கிராமம், குளோப் அரிசி ஆலை, குடாகச்சகொடிய கிராமம், கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, மடுகந்தவிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக் கொடிய கல்லுடைக்கும் ஆலை, தாண்டிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலாமரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"
-கவிஞர் புதுவை இரத்தினதுரை

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மக்களின் அறிவு வளர்ச்சி



அறியாமை என்ற மயக்கத்தில் வாழும் மக்களுக்கு மேலும் மயக்கத்தை யூட்டி அதன் மூலமே வயிறு வளர்த்து வாழும் ஒருவரைத் தவறுதலாக அறிவாளி என்றோ, பெரிய மனிதர் என்றோ, அரசியல் தலைவர் என்றோ, சாது என்றோ, ஞானி என்றோ, மக்கள் கருதும் வழக்கில் உலகம் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே வருகின்றது.

யார் எந்தக் கருத்தை வெளியிட்டாலும், இயற்கையமைப்பு, மனித இன வரலாறு, முன்னோர் கருத்து, தற்கால உலகப் போக்கு, தனது அறிவு நிலை, விஞ்ஞானம், இவைகளோடு அதை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவு காணும் அளவிற்கு, உலக மக்களின் அறிவு நிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

தனித்த ஒரு மனிதனையோ, அவன் கருத்தையோ, சிறப்பித்துப் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழித்து, தான் பயனற்றுப் போகும் அறியாமை இருள், சுய ஆராய்ச்சியால் மக்களிடமிருந்து விலகி வருகின்றது.

இதன் விளைவாக மனிதன் மகத்துவத்தை மனிதன் அறிந்து மனிதனாகவே வாழத்தக்க சூழ்நிலைகள் உலக முழுவதும் குறுகிய காலத்திலேயே உருவாகிவிடும் என்பது திண்ணம்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




**பல்கலைக்கழகக் கல்விக் கான வாய்ப்புகளை விரிவு படுத்தும் அதேவேளை இளை ஞர்களைக் கவரும் வகையி லான தொழிற் கல்விக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாகும்.**

## குழந்தைகளினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் போசாக்கை விருத்தி செய்தல்.

எமது நாட்டில் பிள்ளைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் நிறைவான போசாக்கு உணவாக வழங்கப் படுகின்ற திரிபோசாவை தயாரிப்பதற்கு சோளம், சோயா, பயறு போன்ற தானிய வகைகள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்தத் தானிய உற்பத்தி போதுமான அளவில் கிடைக்காததன் காரணமாக தேவையான பிள்ளைகள் மற்றும் தாய்மார்களில் அரைவாசிக்கும் குறைவானவர்களுக்கு திரிபோசா விநியோகிக்கப்படுகின்றது. அதனால் அந்த மூலப்பொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் திரிபோசா உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ரூபா 1500 மில்லியன் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்படும். பெரும்போகத்தில் தானிய விளைச்சலை பெறுவதோடு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்துடன் பிள்ளைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் தொடர்ச்சியாக உரிய திரிபோசா உணவை தொடர்ச்சியாக வழங்குவதற்கு மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.

## தொலைக் கல்வி

ஈ - தக்ஷலா கற்றல் முறைமையினை இற்றைப்படுத்துவதற்கும் மாகாண தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையங்களை வலுப்படுத்துவதற்கும் பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகளை வழங்குவதனை விரிவாக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. எனவே, கற்றல் முறைகளைப் பாடசாலைகளில் உரிய முறையில் தாபிக்கப்பட வேண்டியுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்களைக் குறைத்தல் மற்றும் கொவிட் தொற்று நோய் பரவல் காலத்தில் பாடசாலைக் கல்வியினைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்கும் பாடசாலைகளுக்கு தொலைக் காட்சிகளை வழங்குவதன் மூலம் "குரு கெதர" கல்வி அலை வரிசையினால் அனைத்து மாணவர்களையும் பயனடையச் செய்ய முடியும். இந் நோக்கத்திற்காக ரூபா 4000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். கல்வி மறுசீரமைப்பின் கீழ் சமகாலத் தேவைக்கேற்ப பாடத்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கும் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி, பரீட்சை நடைமுறைகள் மற்றும் சகல கல்வி நிறுவனங்களையும் தேசிய கல்விக் கொள்கையினூடாக ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழிற் கல்விக்கான வாய்ப்புகள்

பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் அதேவேளை இளைஞர்களைக் கவரும் வகையிலான தொழிற் கல்விக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாகும். தற்போது காணப்படும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல், பொருத்தமான நிறுவகங்களை நவீனமயப்படுத்தல் "One TVET" எண்ணக்கருவின் கீழ் காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளை பட்டப் படிப்புச் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களாக மாற்றுதல் மற்றும் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களின் நாடு முழுவதுமான வலையமைப்பை வலுப்படுத்தல் என்பன எமது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் உள்ளனவாகும். அதேபோன்று தொழில்நுட்ப அறிவு மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப திறன்கள், ஏனைய மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆற்றல்களுடன் கூடிய மாணவர்களை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சியாண்மையுடன் தொழிற் கல்வியினை ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற தொழிற் பயிற்சி கல்வி நிறுவகங்களுக்கு வருடாந்தம் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையினை 100,000 இலிருந்து 200,000 ஆக அதிகரிப்பதற்கும் தனியார் துறையின் கொள்ளளவினை 50,000 மாணவர்களாக ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களின் செயலாற்றுகை, ஆசிரியர் பயிற்சி, தொழில்நுட்ப உபகரணங்கள், கட்டட பராமரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் ஆகியவற்றை மதிப்பீடு செய்து அவற்றின் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் மற்றும் நிறுவன ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன். தாதி மற்றும் பராமரிப்புச் சேவை தொழில் கல்வியை விரிவுபடுத்துவதற்காக தாதியர் பாடசாலையை பட்டப்படிப்பு வழங்குகின்ற கல்வி நிறுவனமாக தரம் உயர்த்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.

தொழிற் கல்வியினைத் தெரிவு செய்து தமது பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு, சொந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான மூலதனமாக 4 சதவீத வட்டி வீதத்தில் 500,000 ரூபாவினைக் கடனாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். கடன் மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு ஒரு வருட சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் கடனை மீளச் செலுத்துவதற்கு 4 வருடங்கள் மேலதிகமாக வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக இத்தொழில் முயற்சியாளர்கள் குறைந்த கட்டணமான ரூபா 12,000 இனை வட்டியுடன் தவணைக் கொடுப்பனவாக செலுத்துவதற்கான வாய்ப்பினைப் பெறுவர். குறித்த நிதி உதவி அங்கீகரிக்கப்பட்ட வியாபாரங்களில் முதலீடு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் வகையில் பின்னூட்டல் மற்றும் விரிவாக்கல் சேவைகளுக்காக 0.25 சதவீதம் வருடாந்த அர்ப்பணிப்புக் கட்டணமாக அறவிடப்படும்.

இந்த தொழில் முயற்சிகளுக்கு 5 வருடங்களுக்கு வரி விடுவிப்பினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அத்தகைய ஆரம்ப மூலதனம் மற்றும் நிதிச் செலவுகளை வரிக் கணிப்பீட்டின் போது கழிப்பனவுச் செலவினமாகக் கருதுவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

"One TVET" எண்ணக்கருவின் கீழ் தர நிர்ணயம் செய்யப்படும் தனியார் துறை நிறுவனங்களின் பங்களிப்பினை மாணவர் அனுமதியினை 50,000 இனால் அதிகரிப்பதன் மூலம் ஊக்குவிப்பதற்கு குறித்த நிறுவனங்கள் தமது மாணவர் அனுமதியினை இரட்டிப்பாக அதிகரிக்குமாயின் அவற்றினது வருமானத்திற்கு ஐந்து வருடங்களுக்கு வரி விடுமுறை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். அதேபோன்று, சுற்றுலா, சுகாதாரம், நிர்மாணம், விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை போன்ற துறைகளில் விசேட நிபுணத்துவம் கொண்ட இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## பல்கலைக்கழக வசதிகளை விரிவுபடுத்தல்

தேசிய பல்கலைக்கழகங்களில் மருத்துவ, பொறியியல், தொழில்நுட்ப, சட்ட, வர்த்தக மற்றும் வியாபார முகாமைத்துவம் போன்ற பாடங்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கிணையாக தொழில் வாய்ப்புகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட பாடங்களை இலக்காகக் கொண்ட வதிவிடமல்லாத நகர பல்கலைக்கழகங்களை மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் தாபிப்பதற்கு முன்மொழிகிறேன்.

இதன் ஆரம்பமாக களுத்துறை, அம்பாறை, புத்தளம், நுவரெலியா மாவட்டங்களில் தற்போது காணப்படுகின்ற தொழிற் கல்வி அல்லது ஏனைய அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கு முன்மொழிகின்றேன். இதற்கான விசேட ஏற்பாடு ரூபா 1000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.

## விளையாட்டு

கிராமிய மட்டத்தைப்போன்று தேசிய மட்டத்திலும் பாடசாலை மாணவர்களினதும் இளைஞர், யுவதிகளினதும் பங்குபற்றுதலினை விரிவுபடுத்துவதன் மூலம் சமூகவிரோத செயற்பாடுகளிலிருந்து அவர்களைத் தடுத்து கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அடிப்படை புறக்கிருதி செயற்பாடுகள் என்ற வகையில் விளையாட்டு அபிவிருத்தியை தேசிய முதலீடாக அரசாங்கம் கருதுகிறது.

விளையாட்டு பாடசாலை போன்று கலாசார நிலையங்களுடன் இணைந்த இளைஞர் மக்கள் சமூக நிலையங்கள் மூலம் இளைஞர்களின் கவர்ச்சிகரமான விளையாட்டு புறக்கிருதி செயற்பாடுகளுடன் இணைப்பதற்கு செயற்கையான ஓடு தடங்களைக் கொண்ட 10 விளையாட்டு பாடசாலைகள் மேம்படுத்தப்படும். 2032 ஒலிம்பிக் விளையாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கும் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுக்கு பெண்களின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கும் 2025 ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 1000 மில்லியன் பெறுமதியைக் கொண்ட விளையாட்டுப் பொருளாதாரத்தை நிர்மாணிக்கும் 2021-2024 நடுத்தர கால முதலீட்டின் ஆரம்ப முதலீடாக ரூபா 200 மில்லியன் மேலதிக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன். குருநாகல், யாழ்ப்பாணம், ரொரின்டன், போகம்பர மற்றும் பியகம விளையாட்டு அரங்குகளில் செயற்கையான ஓடு தளத்தை நிர்மாணிப்பதற்கும் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிக்காக தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட நவீன விளையாட்டு நகரமொன்றை சூரியவெவ பிரதேசத்தில் நிர்மாணிப்பதும் இந்த வேலைத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

## நடைப் பயிற்சித் தடங்களும் பொது வசதிகளும்

உயிரியல் பல்வகைத் தன்மை கொண்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு சூழல் நட்பு, சமுதாய தேவைப்பாடுகள் மற்றும் ஆரோக்கியமான வெளியரங்க பொழுதுபோக்கு சூழலினை உருவாக்குவதுடன் நகர நடைபாதைகள் மற்றும் அதனுடன் இணைந்த நகர வசதியேற்பாடுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாடு முழுவதிலுமுள்ள மாநகர மற்றும் நகர சபை எல்லைகளுள் நகர சூழலில் 25 சதவீத அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## சுற்றுலாத் துறை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூலம் வீழ்ச்சியடைந்த சுற்றுலா தொழில் மீண்டும் தலைதூக்குவதற்கு முன்னர் கொவிட் உலகளாவிய தொற்று நோய் நிலைமையில் பின்னடைவுக்கு உள்ளாகியிருக்கின்றது.

(தொடரும்)

## பலாலியில்...

ரால் 2 எறிகணை குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பலாலி - அன்ரனிபுர பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் இருந்து இரண்டு துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட எறிகணை குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்ட குண்டுகளை செயலிழப்பதற்காக வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தரவை பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## பாடசாலைகள்...

திங்கட்கிழமை ஆரம்பமாவதாகவும் இது உடனடியான ஏற்பாடுகள் அல்லவெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த பகுதிகளில் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஞா)

## மாங்குளத்தில்...

டுள்ள 57ஆவது படைப் பிரிவினை சேர்ந்த சிப்பாய் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் வீதியில் பயணித்த போது மணவாளன் பட்டமுறிப்புப் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்து தொடர்பில் படையினரின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-316)

## தீ மூட்டி...

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இனந்தெரியாதோர் மூட்டிய தீயில் எரிந்து முழுவதும் சாம்பலாகியது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-104)

## உயிரிழந்தவர்...

செய்வதே ஒரேயொரு சாத்தியமான வழி என அரசாங்கம் நியமித்துள்ள நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களை தகனம் செய்வதற்கு இஸ்லாமிய மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். மேலும் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது சாத்தியமா? என்பதை ஆராய்வதற்காக அரசாங்கத்தால் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

குறித்த குழுவினர் இது குறித்து ஆராய்ந்துள்ளனர். இந்த நிலையிலேயே, உடல்களை தகனம் செய்வதே ஒரே வழி என அந்தக் குழு தெரிவித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஞா)

## படுகாயமடைந்த...

நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் வசிக்கும் விஜயரட்ணம் தவனேஸ்வரி (வயது - 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஞா-104)

## ஆசிரியர்கள்...

கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இன்றைய தினம் மேல் மாகாணம் தவிர்ந்த சகல பகுதிகளிலும் பாடசாலைகள் திறக்கப்படவுள்ள நிலையில் மாகாண கல்வி அமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த நிலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் (மேல் நிலை பாடசாலைகளுடன் இயங்கும் ஆரம்ப பிரிவுகள் உட்பட) பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டியதில்லை.

எனினும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கு சிறப்பு விடுப்பாக கணிக்கப்படும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அவர்கள் பாடசாலை அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணம் உட்பட தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள வடக்கு மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு உரிய அறிவித்தலை வழங்கினால் அவர்களுக்கும் சிறப்பு விடுப்பு வழங்கப்படும் என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார். (ஞா)

## குடும்பஸ்தர்...

பிள்ளைகளின் தந்தை நேற்று முன்தினம் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த தவராஜசிங்கம் பிரதீப் (வயது-38) என்பவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## 20 ஆயிரத்தை...

ரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 162ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இன்னும் ஆறாயிரத்து 10 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றினால் இதுவரை 83 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 4 பேர் பலி...

தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 87 ஆக அதிகரித்துள்ளது.

2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு - 15 பிரதேசத்தை சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவரும் கொழும்பு - 12 பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுடைய ஆண் ஒருவரும் பொரளை பிரதேசத்தை சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும் மற்றும் கொழும்பு - 10 பிரதேசத்தை சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார். (ஞா)

## மேலும்...

இதேவேளை, புதிய அமைச்சரவையில் பசில் ராஜபக்ஷ இடம்பெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அநேகமாக அவருக்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சு வழங்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களும் பாராளுமன்ற உறுப்பினராகலாம் என்ற சரத்தும் நிறைவேற்றப்பட்டது.

பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றம் கொண்டு வரும் நோக்கிலேயே இந்தச் சரத்து உள்ளடக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ விற்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிட்டு சர்ச்சை பெரும் விஸ்பரூபம் எடுத்துள்ள நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், அவருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக நேற்று மாலையில் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இதுவரை அதை உறுதி செய்ய முடியவில்லை. எழுத்துபூர்வமான அறிவிப்பு எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லையென்றும் தெரிய வருகிறது. (ஞா)

## முன்னாள்...

போராளியான தமிழன்பு என்று அழைக்கப்பட்ட பா.சுபாசினி உடல்நலக்குறைவால் உயிரிழந்துள்ளார்.

தேச விடுதலைப் போரில் கிளாலிப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் தனது காலை இழந்த இவர் பின்னர் கணனிப் பிரிவுடன் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் போரின் கொடூர பக்க விளைவுகளால் மிகவும் கடுமையான வலிகளை சுமந்தபடி லண்டனில் வாழ்ந்து வந்த ஒரு பிள்ளையின் தாயான இவர் நேற்று உயிரிழந்துள்ளார். (ஞா-60)


மஹஜன சம்பத
திகதி 2020/11/22
சீட்டிழுப்பு இலக்கம் 4314
E 4 7 2 9 2 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2609
F 26 32 42 77
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.11.22
சீட்டிழுப்பு இலக்கம் - 351
A 25 38 48 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 22/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0681
F 18 11 34 42 74

அத கோடிபதி
தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1110
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 22.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 85,569,140
வெற்றி இலக்கங்கள்
15 26 29 43 M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 3440
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 22.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,070,331
வெற்றி இலக்கங்கள்
22 35 46 69 P
5812
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1284 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 22.11.2020 தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
W 10 24 45 59
SUPER 500 7 4 2 1

ராசி
சுப்பர் ஜக்பொட் 30,87,688/=
திகதி: 22.11.2020
வெற்றி வாரம்: 2991
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் கும்பம்
03 04 08 25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,665,740

E 03 22 34 47
654
மஞ்சள்
22.11.2020
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,309,045
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## குருநாகல் மாவட்டத்தில்

# 14 தபால் ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு) குருணாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களும் மீள அறிவிக்கும் வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குருணாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தபால் சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாகவும், தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிவித்தலொன்றை விடுத்துள்ள அவர்,

குருணாகல் பிரதேச தபால் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் குருணாகல் தலைமை தபால் நிலையத்தின் 14 ஊழியர்களுக்கு கொவிட் -19 தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கமைய, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (ஞா)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி வீதி மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

(தரகர் தேவையில்லை.)

( ஆனைக்கோட்டைச் சந்தியில் இருந்து 70 மீற்றர் தூரம்.)

077 623 4204, 077 288 0152

(4720)

ஜோதிடம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு - 077 572 9724

(4690)

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-735)

மணிவிழா காணும் நாயகியை பாராட்டி வாழ்த்துகின்றோம்

( 23.11.2020 )



திருமதி ஜெயதேவி மகேந்திரன்

S L.T.S - I ( கிளி/ புனித அந்தோனியார் றோ. க. வித்தியாலயம் )

அறிவுக் கண்களை திறந்து வைத்த ஆசானே-நீவீர்
அளித்த கல்வியால் விளைந்த பயிர்கள் ஏராளம்.
அனுபவத்தில் முதிர்ச்சி பெற்ற ஆசிரிய பெருந்தகையே
ஆசிரியர்களுக்கு ஆசிரியராய் தனிசிறந்த வழிகாட்டி
உன்னதப் பணியாற்றிய உத்தமியே!
பணிநிறைவு காண்பீர் பள்ளியிலே
பரிமான உலகில் மூத்தோராய்
பணி ஓய்வினை மகிழ்வுடன் ஏற்று
வாழ்க வளமுடன் இறைவனின் ஆசிவேண்டி
என்றென்றும் இன்புற்றிருக்க நாமெல்லோரும்
வாழத்துகின்றோம்.

சேவை விபரம்

கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்
ஆசிரியர் : 26.12.1985 - 31.10.1988
கிளி/முருகானந்த கல்லூரி
ஆசிரியர் : 01.11.1988 - 31.12.1992
கிளி/முருகானந்த கல்லூரி
பிரதி அதிபர் : 01.01.1993 - 11.05.1999
கிளி/ஞானாசிரியர் கல்லூரி
ஆசிரியர் : 12.05.1999 - 31.12.2002
கிளி/முருகானந்த கல்லூரி
பிரதி அதிபர் : 01.01.2003 - 31.12.2007
கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
ஆசிரியர் : 01.01.2008 - 31.12.2011
கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்
உப அதிபர் : 01.01.2012 - 23.11.2020

(C-746)

பாராட்டி வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்
கிளி/ புனித அந்தோனியார் றோ. க. வித்தியாலயம்
2ம் கட்டை, முரசுமோட்டை, பரந்தன்

English Trainer Training Diploma

240 hrs (Teacher Training) 4 Months

- அடிப்படையிலிருந்து முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும்

(4702)

- Reading
- Writing
- Listening
- Speaking
- Presentation
- Teaching Practice

புதிய பிரிவுகள் - ஆரம்பம்

முதன்மையினை மேற்கொண்டு கற்கைநெறியில் இணையவும்.

25.11.2020 - Weekdays / 9.00 a.m - 1.00 p.m
28.11.2020 - Weekends / 1.30 p.m - 5.30 p.m

ELAS இல.51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 076 223 5678, 076 697 3040

தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்திரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

(C-745)

றோயல்

சுத்தமான தேன்




உங்கள் முழுக் குடும்பத்தின்
ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே
பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.
ஆய்வு கூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது.

Packed By :
ROYAL INDUSTRY®, JAFFNA.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா®,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்து சந்தி அருகில் )
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 2567

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்



வ. கபில்ராஜ்
( 170 )



ஜெ. செமீரா
( 169 )



கோ. ஹரிகரன்
( 163 )

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவர்களை பாராட்டுவதோடு கல்வியில் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.

(4703)

மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-736)

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.